உ

கணபதிதுணை.

ஸ்ரீ தத்துவராயசுவாமிகளால்

மொழிபெயர்த்தருளிய

சிவப்பிரகாசமென்னும்

# ஈசுரகீதை.

இஃது

ஸ்ரீ. கோ. சித. மடம்

ஸ்ரீ பொன்னம்பலசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டதற்கிணங்க,

ஷை மடாதிபர்கள்

ஸ்ரீ சிதம்பரசுவாமிகளின்

உத்தரவின்படி

முள்ளங்குடி நாராயணசுவாமியால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

# ஈசுரகீதை அத்தியாய அட்டவணை.



| எண். | விஷயம். | பக்கம். | பாடல்தொகை |
|---|---|---|---|
| | பாயிரம் ... ... ... ... | ௧ | ௪ |
| ௧ | இருடிகள் வினவல் ... ... ... | ௨ | ௨௬ |
| ௨ | சாங்கியயோகவர்ணனம் ... ... ... | ௬ | ௫௫ |
| ௩ | சம்பிரதாய வர்ணனம் ... ... ... | ௧௪ | ௨௧௫ |
| ௪ | பத்திமை வர்ணனம் ... ... ... | ௧௬ | ௨௧ |
| ௫ | விசுவரூப வர்ணனம் ... ... ... | ௧௯ | ௪0 |
| ௬ | சிவசத்தியின் செயலுரைத்தல் ... ... | ௨௫ | ௨௫ |
| ௭ | தத்துவநிசம் விபூதியுரைத்தல் ... ... | ௨௯ | ௨0 |
| ௮ | பிரபஞ்ச வர்ணனம் ... ... .. | ௩௨ | ௧௩ |
| ௯ | மாயாவிகார முரைத்தல் ... ... ... | ௩௪ | ௧௮ |
| ௧0 | தத்துவதெரிசனம் ... ... ... | ௩௭ | ௧௪ |
| ௧ | யோகமுரைத்தல் ... ... ... | ௪0 | ௮௭ |

உ

கணபதி துணை.

சிவாயபரப்பிரமணேநம:

# ஸ்ரீ சராகிதை.

## பாயிரம்.

பூதமைந்தோ டாவிமதிபருடனாகிப் புணர்ந்தென்றும்
பேதமில்லா வறிவுருவாய்ப் பிறங்குகின்ற பேரொளியோ
னாதிமூவர்க் கறிவரியோனரிவை பாகனாமமலன்
பாதபங்கயங்க டலைவைத்தே பணியுப்பரிசினனால். (க)

வேறு.

இலங்கியமறைசனார்க்கு மியம்புதற்கியலாதென்ன
மலங்கியசிந்தையோடு வானவர்மூவர்சிற்க
விலங்கியவனையவென்னை வேதகஞ்செய்தென்னுர்னே
துலங்கியசொரூபானந்தன் றுணைபடிதொழுதல்செய்வாம். (உ)

வேறு.

நன்மதியணிந்தசெக்கர் நன்மவுலிமுதல்வனே யென்னமுன்னின்று, நன்மதிமுனிவர்கேட்ப வன்பொடுநல்கிய நான்மறைப்பொருளைப், புன்மதிச்சொலவும் பொருளுமொன்றுணரோன் போதகஞ்செயப்புகுமிதுகண், டென்மதியெனக்கே நகைசெயுமாறு லேதிலார்க்கென் செயாதிதுவே. (௩)

சிவன் றிருவுருவுகொண்டு முன்பருளிச்செய்ததோர் புராணமாதலினாற், சிவன்றனையளித்த பான்றிருநாமஞ் சிவப்பிரகாசமாமதனாற், சிவந்தசெந்தமிழா வியார்க்குமிந்நிலத்தே சிவந்தனைத்திகழ்த்திடுந் தெளிவாற், சிவன்றனக்குரிய தாதலானுமஞ் சிவப்பிரகாசமென்றுரைப்பாம். (௪)

பாயிரம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௪.

முதலாவது,

## இருடிகள் வினவும் அத்தியாயம்.

பிரமாண்டங்கள் படைத்தவப்பரிசும் பெருமையுமனுக்களெல்லோர்களும், வாமுறவுரைத்தாய் வளம்பெறவதிலே வாய்மையால் விருணைநாலுகினிலுங், தருமதற்பரராய் ஞானயோகத்தே சாலவாதரிப்பவர்தம்மார், நிரமுறப்பரவுந் தேவதேவர்க்குந் தேவனுண்டென்று செப்பினையால். (க)

நாதனுபரிய நான்மறைதெரிந்து நன்னெறியளிக்குநாரணனு
மாதவமுனிபா லறிவெலாமறிந்தா யாதலாலரும்பரந்திகழ்த்தி
யேதமார்பிறவி யறுப்பதாஞான மேதுவியம்புவாயென்று [னர்.
சூதமாமுனியைச்சவுனகன் முதலாந் தொல்லைமாமுனிவர்கள் சொன்

வேறு.

சூதமாமுனிமுனிவர்கள் சொன்னவாகேட்டுப்
போதமாநெறியளித்தன புராணனைநினைவுற்
றோதுவாரொருப்பட வவன்றனக்குணர்வளித்த
நாதனுகியவியாசனு முறைவிடநடந்தான். (ங)

கார்முகில்போலுமேனி கமலதாமலர்போலுங்கண்
ணோர்மிகுமுனியையெல்லா முனிவருமிறைஞ்சச்சூதன்
பார்மிசைத்தெண்டம்பண்ணிப் பன்முறைவலமாய்வந்து
கூர்மிகுமன்பிற்சென்னி குவித்தகையோடுநின்றான். (௪)

அருந்தவத்தோர்களெல்லா மனுமயநுரைத்தவற்குப்
பொருந்துமாதனங்கற்பிக்கப் பூசுரார்முகங்கணோக்கி
யிருந்தவங்கல்விகேள்விக் கில்லையேயிடையூறென்று
பெருந்தகையுரைத்தான்சூதன் பின்னரும்வணங்கிச்சொல்வான் (ரு)

வேறு.

இத்தபோதனர்கள் சாந்தியா லறத்தா லிறந்தவரிறையியல்பறிவான், பத்தரானவர்களேவலேசெய்யும் பாவகம் பிறந்தனெவர்க்கு, மத்தனுரியண்டாமையாய்முனிகட்கருளியவேதெனக்களித்த, சுத்தஞானத்தை யிவர்களுக் கருளாற் சொல்லெனத் துணையடி தொழுதான். (சு)

வேறு.

சொன்னவாசகமுளங்கொளா விறைதுணைப்பதங்களை நினைந்துதன், சென்னியாலுறவணங்கி விண்ணவர்க டேவனும்பரவுதேவ

னே, முன்னோர்கோன் மிருசனற்குமாரன் முதன்முனிவர்கட் குல
கின் மூலமாந், தன்னையாரருளி னோதினனினிது கேண்மி னென்று
முனிசாற்றினான். (௭)

வேறு.

தலைமைசேர்சனற்குமாரன் சனந்தனன்சனகன்வெள்ளி
யலைவிலாவுருத்திரன்றன் னங்கிராவாமதேவன்
கலைதெரிபிருகுயோகி கபிலனத்திரிகளுதன்
மலைவறுவசிட்டனோடு மரீசியாமதியின்மிக்கோர். (அ)

வேறு.

பரமனதருளாலன்றியே பரத்தைப்பரப்புறப் பார்த்ததம்மதி
யா, லொருவரோடொருவர் பன்னெடுங்கால முசாவியொன் றுணர்
வுறப்பெறுமல், ரைமிகுபதரி வனமடைந்தரிய மாதவம்வருந்தினார்
வருந்த, நரனொடுநாராயண னொருமுனியாய் நற்றவர்க்கருள்செய
நிட்டந்தான். (௯)

நாரணனருளிற் பணிந்துமா முனிவர்கோன் மறைமொழியினால்
லழுத்தக், காரணந்தன்னை யறிந்துநீர்தபித்த காரணமென்னெனக்
கண்ணனை, னேரணிமறையின் பொருடெரிந்திடு நற்செங்களாலியன்றில
தில்லா, வாரணப்பொருளை யறிகுவாய்நீயே யாதலாலுன்னையே
யடைந்தோம். (௧௦)

வேறு.

ஏதுகாரணமிவ்வுலகினுக் கெல்லாமென்று நின்றளிப்பவனெவன்று
னேதுதானென்பாவேது வீடேவன்பிறப்பவனெவன் பிறப்பிப்பா
னேதுமாராலே கண்டிடப்படுவதினையறு பிரமமேதெல்லா
மோதுவாயெங்களைய நீயல்லாலொழிப்பவரிலலையென்றுரைத்தார்.

வேறு.

அந்தவெல்லையி லம்புயைகேள்வனும்
வந்ததன்றவ வேடத்தைமாறியே
சிந்தையாலிமை யோர்க்குந்தெரிக்கொணு
வெந்தைதன்னொளி யாலேயிலங்கினான். (௧௨)

திங்களையிறுபோலத் திகழ்ந்தவெண்
சங்குமாழியுந் தண்டஞ்சாரங்கமுஞ்
செங்கைநான்குந் திருமறுமார்பமும்
பங்கயாலயப் பாவையுங்கூடவே. (௧௩)

சுட்டபொன்னினுந் தூயொளியாயொளி
விட்டிலங்கினன் விட்டுவிளங்கொளி
மட்டமன்றிய மண்டலத்தால்வெளிப்
பட்டனன்னரனாய் வந்தபான்மையான். (கச)

வேறு.

அரியுருவுகண்டக மகிழ்ந்தவளவிற்கே
பெரியபரிவோடு பிறைசூடியபிரான்முன்
சுருதிமுடிவோதுபொருள்சொல்லுதறுணிந்தே
கருதவரியான்முனிவர் கண்ணில்வெளிநின்றான். (கரு)

வேறு.

செயசெயதேவர்போற்றுந் தேவமாதேவபோற்றி
யயமறமுனிவர்போற்று மம்பிகாபதியேபோற்றி
நயமுறுமன்பாலன்றி நணுகுதற்கரியாய்போற்றி
செயலறவிருந்தயோகிற் றிகழ்ந்திடுஞ்சிவனேபோற்றி. (கசு)

கந்தரைகனல்கானீராற் கலந்திங்ஙன்கட்டப்பட்ட
வெந்திரம்வல்லாய்போற்றி யியங்கிடவளிப்பாய்போற்றி
யந்தமுஞ்செய்வாய்போற்றி யானந்தவுருவேபோற்றி
பந்தனையறுப்பாய்போற்றி பரமகாரணனேபோற்றி. (கஎ)

வேறு.

வெல்கபூதபதிவெல்கசீவபதி வெல்கயோகபதிவெல்கவே
பல்குபேருருவுகண்கைகான்முடி பகர்ந்திடற்கரியபான்மையாய்
தொல்லைநான்மறையினாலுமுன் னியல்புசொல்லலாகுமளவல்லவால்
வல்லவாறுசிலசொல்லியாமுனை வழுத்துகோமெனவணங்கினார். ()

வேறு.

துதித்தமாமுனிவர் தலைகளால்வணங்கித் தொழுதகையினர்களாய்நிற்பக், கொதித்தவான் புலத்துக்கொண்டல்வந் துதவிற்றொப்பவேகொடிய வெங்கூற்றை, யுதைத்ததாளுடையா னுலகமுண்டுமிழ்ந்த வொருவனைத் தழுவியிங்கிவர்கள், பதைத்தகாரணமென் செய்யவேண்டுவதென் பகரெனப்பவளவாய் மலர்ந்தான். (க௯)

அந்தமாலிறைவனருள் செய்வாசகத்தைக்கேட்டவ ரருந்தவவெரியால், வெந்தபாவத்தால் விமலபாவத்தான் மெய்ப்பொருள் விளங்குவான்வேண்டி, யெந்தையேயெனையே யடைந்தனரிவர்கட் கிரங்கியான் கேட்டெனிருப்பப், பந்தவேரறுக்கும் பரமஞானத்தைப் பகர்ந்தருள் செய்கெனப் பகர்ந்தான். (உ0)

உன்னை நீயுணர்தியல்லது வேறு ருணருவாருள துபோ ரருளாற்
றன்னையே தன்னாற்றுணரியறிவு சங்கராவிவர்க்கருளென்று
பின்னர்மாமுனிவர் தங்களை நோக்கிப் பிஞ்ஞகன் பெருகியவருளா
லென்னை நீர்வினவுமரும்பொருள் வினவி டெயதுவீ ரெனவவர்க்கிசை
[த்தான். (உக)

வேறு.

கேசவனுரைத்தமாற்றங் கேட்டவர்பணிந்து பின்னு
மீசனை வினவுமெல்லை யிருவிசும்பிடையே தெய்வ
வாசனம் வந்ததாங்கே யரியொடுமளவிறந்த
தேசிகனுலகிலமெல்லாந் திகழவீற்றிருந்தான் றேவன். (உஉ)

வேறு.

யாதொன்றிலடங்க விளைந்தவெலா
மியாதொன்றிடைநின்ற தொடுங்குவதப்
பூதங்களினுதனோர் பொன்னணைமே
லேதங்கெடவேறி யிருந்தனனால். (உங)

வானே முதலியாவையு மன்னிடமாய்த்
தானே முழுதாகிய தத்துவமாங்
கோனேயிவர் கண்டு கொளும்படியா
னேயரியோடு மோராதனமேல். (உச)

ஓவாமையுளத் திடையோருசெய்வார்
பாவாலபமேவு பரம்பொருளைத்
தேவாதிபர்தேடு சிவன்றனையே
யாவாவவர்கண் டனராதனமேல். (உரு)

வேறு.

அளவிறந்தவன்பாகிய வருந்தவர்க்கமலன்
முளரியங்கண்வண்டுழாய்முடி முகுந்தனை நோக்கி
வளமிகுந்தமெய்ஞ்ஞான நான்மறைமுமக்குரைப்ப
வுளமொருங்கியன்போடு கேட்டுணர்மினென்றுரைத்தான். (உசு)

முதலாவது,

இருடிகள் வினவுமத்தியாய முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௩௦.

## இரண்டாவது,
# சாங்கியயோக அத்தியாயம்.

மறைபயின் முனிவர்கேட்ப மாமறைமுடிவினாலு
மறிவருமறிவானந்த வருளுருவமலன் றன்பாற்
பிறிதருபேதநீத்துப் பெயர்விலாதொன்றாயெங்குஞ்
செறிதருந்தன்னையீசன் றெரிதரவியம்பலுற்றான். (க)

அறைவதன்றிந்தஞான மியாவருமறியாரானுன்
மறைவுறச்செய்வதொன்றாய் மன்னியேவுள்ளதென்றுந்
திறலுடையியமபோதி செய்தசீர்மறையோராலு
மறிவரும்பொருளைநீங்க ளறிமினென் றருளிச்செய்தான். (உ)

வேறு.

இந்தஞானத்தை யெய்தியவின்பத்தா
ரந்தமில்பிரமத் தருவாயினோர்
பந்தமேவிடார்பண்டு மின்றுமென்றே
யெந்தையீறிலி யீசனியம்பினான். (ங)

வேறு.

மறைவுறும்பொருள்களினும் மறைவுறும்பொருண்மிகவு
மறைவுறும்படிசெயலை யறவிருந்திடவுளது
செறியுமன்புடைமையொடு திகழ்தருந்தவமுனிக
ளறிவுறும்படியிதனை யறைவனென் றருளுமிறை. (ச)

வேறு.

அறிவெனவுரைக்கப்பட்ட தவனுடையுருவுதன்னை
குறைவிலாவிமலன்சாந்த னுண்ணியனென்றுமுள்ளோன்
செறியுமெப்பொருட்குமுள்ளாய்ச் சின்மயமாயேகன்றாய்ப்
பிறிதருமவித்தைக்கெட்டாப் பெற்றியனென்றானீசன். (ரு)

யாதொருபொருட்குமுள்ளா யிருந்துளவறிவுதன்னை
மேதகுபுருடனென்று முயிரென்றுமீசனென்றும்
பேதமில்காலமென்று மனமொடவ்வியத்தமென்று
மோதிடுமறைகளென்றே யுரைத்தனனெழிலீசன். (சு)

வேறு.

ஊங்கவன்பாலாவவெலா மவனிடையேயாவதுவு
மோங்கியமாமாயையினை யுடையனதிலார்ப்புண்ணான்

பாங்குறநானுவுடலம் பண்ணியிடுமாயினு
மீங்கிவைதன்னிடைத்தோயா திவைநடத்துமியல்புமிலான். (௭)

பந்தமதிலொருக்காலும் பற்றுணைப்பந்தஞ்
சிந்தைசெய்துந்தான்செய்யான் செய்வானேயேயிற்கு
மூந்தியவான்காற்றனனீர் மண்ணல்லன் முழுதுமா
யந்தமிலாவானந்த வறிவுருவே யவன்வடிவம். (௮)

வேறு.

உயிரினோடுமனமவ்வியத்தமுறுகந்தமாகி புலனைந்தலா
னயர்வினுகியகமென்றநின்றறியுமந்தநாற்கரணமுமிலான்
பெயர்விலாதுசொலும்வாக்கினோடு முதலைந்துமாய்விடயமும்மிலா
னுயர்வதாயவறிவேதனக்குருவமென் றுரைக்குமொளிமேனியோன்.

வேறு.

அயில்கின்றவவைமுதலாம் போகநுகர்பவனல்ல
னுயிரல்லனுயிர்க்குயிராம் புருடனெனுமவனல்லன்
மயலொன்றியுளமாயை யதுவல்லன்மற்றெல்லா
மயர்வின்றியறிகின்ற வறிவுருவென்றேயறிக. (௧௦)

வேறு.

இருளுடனேயொளி யாவதெவ்வண்ண
மருவவிலாவவை மற்றதுபோல
விரிவுளதாய சகந்தனினோடும்
பொருவவிலாத பண்புணர்வெய்தான். (௧௧)

உலகினிலெவ்வண மொண்ணிழறன்னோ
டிலகுமெயிற்கல வாததுபோல
நிலையிலதாய சகத்தொடுநில்லா
னுலவவிலாதொளிர் கின்றபரன்றான். (௧௨)

வேறு.

அறிவினோடொன்றிநிற்குந் தமத்தொடுவிகாரமாங்கே
யறிவினிற்கலக்குமென்று மணைந்துடனிற்குமாகி
லறிவினுக்கனந்தகோடி கற்பம்வந்திறந்திட்டாலும்
பிறிவதற்காகுமுத்தி யில்லையேபேசிலென்றும். (௧௩)

முத்தியையடைந்துயர்ந்த சித்தநன்முனிவனொன்று
மொத்தபோறிவேதன்பா லுளதவிகாரமென்றஞ்
சூத்தமுற்சுகதுக்கங்க டொடர்பிலானந்தரூப
சித்தமென்றிடவுங்காண்ப னென்றனனிகரிலீசன். (௧௪)

### வேறு.

யானேசெய்கின்றனனெவையுஞ் சுகதுக்கங்களென்செயலே
யூனேவாடியிடறடித்த லுடையோனென்றுரைத்திடுவோ
ராணவறிவின்றன்மேலே யாங்காரத்தையிடுதலினு
னேயெல்லாமென்றிருப்பர் ஞானமில்லாரெனவறிக. (கரு)

### வேறு.

அறிவினையுடையராகி யருமறைமுடிவுகண்டோர்
செறியுமெய்ப்பொருட்குஞ்சான்றாய்ச் சின்மயமாயேதன்னிற்
பிறிதருமவித்தைக்கெட்டாப் பெற்றியோடெங்குநிற்கு
மறிவெனவுரைப்பரல்ல தயலொன்றுமின்மைகண்டே. (கசு)

### வேறு.

இன்பமொடுதுன்பமது வின்றியொர்விகாரந்
தன்கணிலாவறிவு சார்வதிலைபந்தம்
பின்பதுளனவதறி யாமைமுதலாலென்
றென்பதுளதாகுமுட லோடியையவென்றும். (கஎ)

எப்பொழுதுநின்றுதய மானவொளிதானே
மெய்ப்படவிருந்தறிவ தாகியெவ்விடத்து
மொப்பில்பரனுகுபுரு டன்னகமணைந்தே
செப்பரியவேறுபல செய்வனெனுகின்றே. (கஅ)

இத்தன்மைபதாகுமவ் வியத்தமொடுகூடுமறி
வெத்தனையுமுட்புற மிருந்தறியுமேனுஞ்
சுத்தமதுவாயதன துண்மையறியாதே
யத்தன்மையதாயவுரு வாயழியுமன்றே. (க௯)

### வேறு.

தானலாதொன்றைத்தானே யறிந்திடுமதனலென்று
மானதாஞ்சுகதுக்கங்க ளியாரையும்வெறுப்புண்டாக்கு
மீனமாமயலோடொன்றி யிருந்திடுமுடலங்கொண்டே
யானதாயழியுமென்று மறியாமைமுதலாய்க்கொண்டே. (உ0)

### வேறு.

கருமஞ்செயவிடர்வந்துறு மதுபுண்ணியபாவந்
தருமென்றுரைசெயுமாமறை யவையாகியவசமே
யுருவந்தருமுழுதும்முள தாகும்மெனவொழியா
வருடந்திடுமொளிமேனிய தறிகென்றருள்செயுமால். (உக)

வேறு.

அழிய தெங்குமுளதாகி யனைத்துட் புறம்புந்தானிரம்பி
யொழியாவறிவாயொருகுற்ற முறைத்தற்கரியதொருபொருளே
கழியாமாயையதனாலே காணப்பலவாய்த்தோன்றியிடு
மழிவாயினதென்றென்றுமிலா திருக்குமதுவேயியல்பென்றான். ()

வேறு.

ஆதலான்முனிகளுண்மை யொன்றெனவுரைப்பர்வேறும்
பேதமவ்வியத்தத்தாலா மென்றனாதுவுமென்று
மோதியமாயைதன்னை யாச்ரித்திருந்தெய்யு
நீதியதென்றுகொண்டே நிகழ்த்தினனிகரிலீசன். (௨௧)

வேறு.

யாதொர்படி தூமமொடு தூளியொளியாய
நீதியுடைவானமறை யாதவணமேபோ
லோதுபுலனோடு கரணம்முறபவெல்லாம்
போதமுடனொன்றியவை நின்றுபுணராவால். (௨௪)

அடுத்தநிறமெத்தனைய தாயபடிகம்வே
றடுத்திடவிலாதுதன தாயவொளியேபோ
லடுத்தகமதாகியனை யாதவறிவென்றும்
விடுத்திருளைமிக்கொளிய தாய்விரியுமன்றே. (௨௫)

நல்லறிவுளோருலகை ஞானவடிவென்றே
சொல்லுவர்களவ்வறிவி லார்தொழிலில்வேறும்
பல்வகையதேபொருளதென்றறிதல்கொண்டே
நில்லதிலதாமுலகு கண்டிடுவர்நின்றே. (௨௬)

வேறு.

யாதொருபொருட்குமுள்ளாய்க் குணமின்றியெங்குந்தானாய்ச்
சேதனனேயென்றுந் திகழ்ந்திடப்பரிசுகானே
ரோதமாமயக்கந்தன்னா லியாவையுமிருந்தவண்ணம்
பேதமாய்க்காணநிற்ப னொன்றனன்பிறவிநாசன். (௨௭)

வேறு.

படிகத்தனினிடையே பலநிறம்வைகவவ்வுருவாய்
வடிவந்தனதெனநின்றிடு மதுபோலறிவுருவு
முடிவொன்றுமில்பொருளெங்கணும்முழுதும்மொளியாயே
வடிவந்தொறும்வடிவந்தொறும் வேறாய்வரும்வகையே. (௨௮)

வேறு.

ஆதலாலழியாநித்த சுத்தமாயெங்குந்தானும்
பேதமிலறிவு தன்னைப் பெரியவர்பேசக்கேட்டு
மோதியுநினைந்துநாளு மருச்சனைசெய்யவேண்டு
மேதமில்வீடேயெய்தற் கிச்சையேயுடையோர்தம்மால். (௨௯)

யாதொருபொழுதியோக மனத்திடையெய்துகின்ற
சோதியாயிலங்குபோதஞ் சோகத்தாலிடைவிடாத
நீதியாநிகழ்ந்தெப்போது நின்றிடிற்றானே தன்னி
லேதியபரிசுமிலா ரென்றனனுமையோர்கூறன். (௩௦)

பூதங்களைவையுந் தன்பாற் புணர்ந்திடநிற்றல்கண்டே
பூதங்களவற்றினுள்ளும் புறம்புந்தானிற்றல்கண்டோன்
பேதங்களனைத்துமில்லாப் பிரமமேயடைந்துவேறு
மேதங்களனைத்தும்விட்டோ னென்றிடலாகுமன்றே. (௩௧)

யாதொருபொழுதியோகந் தன்னையேயியற்றியின்ப
மேதகுசமாதிதன்னை யடைந்துமேவுகின்ற
பூதமியாதொன்றுங்காணா திருந்தவனெங்குநின்ற
சோதியாந்தன்னிற்றனைச் சோர்வின்றிக்கண்டேநின்றான். (௩௨)

வேறு.

யாவனியாதொரு போதிதயத்தே
மேவியவாசை யெலாமறவிட்டா
னேவருமின்னமிர் தாயவனப்போ
தோவிலாதொளிர் வீடடைவுற்றான். (௩௩)

வேறு.

பூதங்களுடைத்தாயுள்ள வேறெலாமொன்றின்கண்ணே
யேதங்களின்றிக்கண்டு மதினின்றுமெல்லாமாய
பேதங்களனைத்துங்காணா தன்றிவன்பிரமமென்று
வேதங்களனைத்துமோது மெய்யறிவடைந்துநின்றான். (௩௪)

வேறு.

யாவனொருவனறிவுருவாந் தனையேகண்டுமற்றொன்றாய்
மேவலின்றிவேறுபடக் காணான்விளங்குமப்பொழுது
நீவினிலையாயுலகனைத்து மாயைதானேயெனக்கண்டு
மேவலரிதாம்வீடடைந்தா னென்றேவிளம்பியிடலாகும். (௩௫)

### வேறு.

பிறப்பினொடிறப்புமிடை துன்பமடைவென்று
தறப்பரிவுசெய்வதோர் மருந்தனததாய்வ
திறப்பில்பரமாயபிர மம்மதனையெய்துஞ்
சிறப்புடையானை பொழுதேசிவமதாவார். (௩௬)

ஆறுபலகூடியுல கத்தலைகடந்தே
வேறறவுமேவியுட னுருகும்விளைவேபோ
லீறில்பரமாயருவ தாயபிரமத்தோ
டாறுமறிவானவை யடங்கியிடுமென்றே. (௩௭)

### வேறு.

ஆசலாலெல்லாமாகி நின்றதுமறிவேவேறென்
றோதிடக்கண்ட தில்லை யுள்ளபோறிவைநீக்கி
யேதமாம்பந்தமோடிவ் வுலகமுமிலையேபார்க்கி
லாதியாமறிவைமூடி யறியாமைமயக்குமன்றே. (௩௮)

### வேறு.

இவ்வண்ணமுரைத்தஞான மமலமாய்நுண்ணிதாகி
மெய்வண்ணவிகாரமின்றி வேறொன்றோடணைதலின்றி
மைவண்ணவிருத்தியின்றி வளரொளியாயேற்கு
மிவ்வண்ணமல்லாதெல்லா மிருளுடையறிவாமன்றே. (௩௯)

ஓங்கியமுனிகாளுங்கட் குரைத்தவேதாந்தசாரஞ்
சாங்கியஞானமென்றே சாற்றிடுந்தன்மையாகு
மீங்கினியோகமாவ திறையின்றிவிடயமெல்லா
நீங்கியேயென்றனோடு நிலைபெறநிற்றல்சித்தம். (௪0)

### வேறு.

யோகஞ்செயஞானம் முளதாகுமதனாலே
யாகும்மிதயோகம் பினையதுவேசெயலுறுவோன்
சோகம்முறுபயனு மவையெய்தாதளவில்லாப்
போகம்முழுதெல்லாம் புணர்கின்றானிவனேயாம். (௪௧)

யாதொன்றினையோகஞ்செய்து பெறுவாரவர்பயனைப்
பேதம்மிலஞானந்தனை யறிவோர்பெறவிசைவா
ரோதம்மிலதாகும்வண மொன்றாயிடல்கண்டே
போதம்முழுபரமாகிய பொருள்கண்டதுபுணர்வார். (௪௨)

யோகஞ்செய்துநின்றொன்று கைவிட்டேவிடயம்மேன்
மோகஞ்செலவிழுமாலவர் முடிவில்லிடருறுவார்

சோகம்மொழிவிக்கும் பரமெய்தார்தமையடையா
ராகம்மறைமுழுதும் மதுதனையேயறைதருமால். (௪௩)

வேறு.

அறையுமவ்வியத்தஞ்சீவன் மாயையாலகிலஞ்செய்யு
மிறைவனுமீசனென்று மியம்பிடுமறைகளென்னை
முறைமையாலுயிர்கட்செல்லா மாகியேமுழுதுங்கண்டே
சிறையிறந்தோங்கியெங்குந் திகழ்தருமொளியுநானே. (௪௪)

வேறு.

எல்லாருமாசையுறுகின்றயாவு மிரதங்கள் கந்தமெனிலே
நில்லாதிறந்துவருமாறிலாது நிலையாகிநின்றவெனிலே
பல்லார்மெய்கைகளொடு கால்களெண்ணில்பலவாயவற்றினறிவாய்
நில்லாதுநின்றுநிகழ்கின்றதென்று முளனுய்விளங்குமெனிலே. ()

வேறு.

கண்ணின்றியெல்லாங் காண்பன் காலின்றியெங்குஞ்செல்வன்
விண்ணின்றவோசையெல்லாஞ் செவியின்றிவிரைந்துகேட்பன்
பண்ணின்றகையதின்றிப் பற்றுவன்விடுவனென்றே
யண்ணனன்முனிவர்தங்கட் கருளினனறியும்வண்ணம். (௪௬)

வேறு.

எல்லாரையுநானறிந்திருப்ப னென்னையறிவாரியாருமிலை
நல்லாருண்மையெனக்கண்டோர் நாடிநின்றேயறிந்தபடி
யல்லாதில்லாவளவில்பரம் புருடனெனவுமறிவின்றி
யெல்லாமாகியல்லாத வேகமெனவுமியம்புவரால். (௪௭)

வேறு.

பார்த்துளமுனிவரென்னைப் பரமென்றும்பண்டுமின்று
நீத்துளகுணத்தோனென்று நின்மலரூபனென்று
மாத்துமப்பொருளீதென்று மலர்தலையுலகுக்குண்மை
யாய்த்துமிவ்வறிவேயென்ப ரல்லவரறியாரொன்றும். (௪அ)

யாதொன்றைமயர்தம்மா லறிவரிதாகுமென்ற
ஞோதியமாயைமூட மோகத்தாலுணர்வதின்றி
யேதுவெரின்றிசையாவென்ற னுண்மையாமறிவைக்காணு
நீதெனமுனிகட்கெல்லா மியம்பினனிமையோர்க்கீசன். (௪௯)

வேறு.

நானேமாயைதனைக்கடந்து நிற்பேன்ஞாலந்தனையியற்றே
னேனையனவுமெனையொழிய யாதோர்செயலுமில்லதனு

ஞனேசகத்தைநடத்தியிடு நாதனென்றுநடுவென்று
மானவறிவோரறிந்திடுவ ரொன்றேயருளிச்செய்தனனால். (௫0)

எங்குந்தானாயாவையுமாய் நின்றேயொன்றாயழிவின்றி
யங்கமொன்றின்றறிவேயாய் நுண்ணிதாயவருள்வடிவைத்
தங்குஞானயோகத்தான் முன்பாசரித்துப்பினைவந்தெ
னங்கமானபேரொளியோ டொன்றியானாயடங்கிடுவார். (௫௧)

வேறு.

ஆங்கவர்களென்னுடைய மாயையைவசித்து
நீங்கியபின்னின் மலமதாயவுருவாவ
ரீங்கிதுசெயாதவர்க ளென்றுமெனையெய்தா
ரோங்கிவருபந்தமதி னின்றுடனுழைப்பார். (௫௨)

வேறு.

சுத்தனாயொன்றாயென்னைக் கூடிடுந்தொன்மையோர்க
ளெத்தனைநூறுகோடி கற்பங்கடாஞ்சென்றாலு
மெய்த்தகமீளாரொன்றன் விளங்குமெய்யருளாலென்றே
யித்தகைத்தெனவேவேத மியம்பிடுமென்றானீசன். (௫௩)

வேறு.

என்னாலுங்கட்கியம்பிய விஞ்ஞானஞானயோகிகட்கும்
பின்னாழமதுபுத்திரர்க்கும் பேணுமியோகசாங்கியர்க்குஞ்
சொன்னாலாகுமல்லாதைத் தூரவொழிப்பதிதுவென்றே
தன்னேரினையானாமீசன் றானேசாற்றியருளினான். (௫௪)

வேறு.

அன்றரியாமையாகி யருள்செய்தபுராணந்தன்னின்
முன்றிகழ்பிறவிதீர முனிகளுக்கீசன்சொன்னான்
குன்றிடாமறையினீறாங் கீதையினிரண்டாமத்தை
யின்றெலாமறியும்வண்ண மியன்றவாறுரைத்ததன்றே. (௫௫)

இரண்டாவது

சாங்கியயோகவத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௮௫.

---

## மூன்றாவது
## சம்பிரதாய அத்தியாயம்.

முன்னநான்மறை யோதிமுடிந்ததை
யுன்னுமாறறி தாகியவொன்றினை
ஞன்னுஞானமு ஞேயமுமல்லதை
யின்னங்கேண்மினென் றீசனியம்பினன். (௧)

வேறு.

நன்றாய்ஞானகனமாகி நானாவெல்லாம்பிறப்பிடமா
யொன்றாய்வேறோர்பொருளின்றி யொளியாயொன்றோடுவமிப்ப
தன்றாயகிலசராசரங்கட் காதாரந்தானாயென்றும்
பொன்றாததுவாயவிகாரப்பொருளாய்ப்புலனாய்ப்புணர்ப்பரிதாய். (௨)

இரண்டாவதிலாதளவைகளா லெட்டாததுவாயெங்கெங்குஞ்
சிரங்கால்கைகண்முகமுடைத்தாய்த் தெரியப்படாதாய்த்திரமாகி
யிரும்பார்நீர்தீகால்வான மெல்லாமிருத்தற்கிடமாகும்
பரந்தானுணர்ந்தோர்நிர்க்குணமாம் பரமவியோமமென்பர்களால். (௩)

அரிதாயறியாவறிவேயா மனைத்தாருயிர்க்குமுயிரந்தப்
பெரிதாயகமும்புறமுமாம் பிரமனானேபிறர்க்கென்றுந்
தெரியாதென்னாலேபரம்பி யென்பாலிருந்திச்சகமெல்லாஞ்
சரியாநின்றதென்றறிவான் சகலவேதங்களுமறிவான். (௪)

ஒருதானாயபரம்பொருளை யுணரப்படாதவியல்பதனாற்
றெரியாமையெனப்படுமந்தத் தெரியாமையிலேதிகழ்காலம்
பிரதானந்தான்புமான்பிறந்த வவற்றான்முழுதும்பிரத்தவினு
னிருபாதிகமாம்பிரமமய நிகழ்வேயிந்தநிகழ்வெல்லாம். (௫)

சொன்னகாலம்பகுதிபுமான் றோற்றமென்பாலிரண்டிற்கு
முன்னாருங்காலமிவை மூன்றுமென்பாலேமுடியு
மன்னதன்மையாலாதி யந்தமின்றியன்னியமா
யென்னில்வேறாயின்மையினா லென்னதுருவேயென்பர்களால். (௬)

வேறு.

மகமுதலாகவிசேடமீறாகமன்னு மிச்சகத்தெலாந்தந்து
சகலவாருயிர்க்கும்மோகமே செய்யுஞ்சத்தியைப்பகுதியாகவும்
திதியிலாங்காத்துடன்புணர்ப்பாற் பஞ்சவிஞ்சகனெனப்பட்டுச்
சுக[illegible]துக்கந்துய்ப்பவன் புருடனாகவுந்துணிந்தனர்தொல்லோர்

வேறு.

ஆதிவிகாரப்பகுதியின்மாறு மறிதலில்விஞ்ஞாதாவுமவன்பே
ோதவசங்காரமமெனமாறு மொருவனுமேயங்கிருபெயருற்றுன்
றீதுறுதேகங்கொண்டுநடத்துஞ் சீவனுமாகச்செப்புதலுற்று
ஞுதலினெந்தப்பிறவியுமின்ப துன்பமுமாங்காரத்தவனுலே. (அ)

வேறு.

சோலமறிவேசீவனுக்குங் கொண்டுதெய்க்குங்கருவிமனஞ்
சாலுமதனலவிவேக மதனுற்றுன்பஞ்சாருமான்
மாலும்பகுதியிற்புருடன் வைத்தபற்றுன்மற்றந்தக்
காலஞ்செய்யும்பிறப்பிறப்புக் கதுவேயென்றுங்காரணமாம். (கூ)

படைப்பதுங்காலந்தானே படைத்தவையாவுநேராய்த்
துடைப்பதுங்காலந்தானே தொல்லையீறில்லாக்காலத்
திடைப்படத்தோன்றிமாயு மியாவையுமியாவரேனுங்
கடப்பவரில்லைக்காலங் காலமேகடந்துநிற்கும். (க0)

வேறு.

நிகிலவுலகுநடக்கும்வகை நேரோகியமிக்கின்றததா
சகலவுயிர்க்குமுயிருமது தானேயுள்ளாயிருக்குமது
வகிலவறிவுமுடையதது வாதலான்மற்றக்காலம்
பகரவுறுவர்சனுதனனும் பகவான்புருடோத்தமனுக. (கக)

வேறு.

இந்தியங்களிற்பரமன மனத்திலாங்கார
மந்தமானவாங்காரத்திற் பரமவ்வியத்தம்
பந்தமாமதிற்புமான் பரமதிற்பாங்கால
மிந்தயாவைக்கு முயிரிதிங்கிதனிலெல்லாம். (கஉ)

வேறு.

சகத்தினுயிராங்காலபரந் தன்னில்வியோமம்பரமதனை
மிகுத்துநின்றவியல்பதனல் வியோமாதீதனுமெல்லாந்
தெகித்தவதனலனவென்று செப்பப்பட்டயானும்
பகுப்பொன்றில்லாப்பரப்பிரம மென்னில்வேறேர்பரமில்லை. (கங)

பரமாமெல்லாப்பொருளுக்கும் பரமாயுள்ளவெனையறிந்த
வரமாமுனிவன்றனென்று மரியான்பிறவான்மன்னுசரா
சரமாமுலகமெனையொழியத் தானுண்டாகாதொருகானுந்
திரமாநானேயுலகனைத்துஞ் செய்கின்றேனுஞ்சிதைப்பேனும். (கச)

வேறு.

ஏகமாய்நின்றவொன்றனேவலாவெல்லையில்லா
மோசமாஞ்சுகத்தையென்றன் முன்னரோசின்றகாலம்
பாகமாய்ப்பண்ணுமென்று பரம்பரனருளியீதே
யாகும்வேதங்களெல்லா மறைந்ததென்றருளிச்செய்தான். (௪௫)

மூன்றாவது
சம்பிரதாயவத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் ௧௦௦.

நான்காவது

## பத்திமை அத்தியாயம்.

விரிந்ததிங்கெவனால் விண்முதற்பொருள்
பெருந்தகையாமவன் பெருமைபேசிடப்
பரந்தெழுசிந்தையை யொருக்கிப்பத்தியா
லருந்தவர்கேண்மினென் றருளிச்செய்குவான். (௧)

வேறு.

ஏகத்துளோரியாவர்க்குஞ் சான்றாகியானென்று
மகத்துளேநின்றாலும் பழகியபத்தியினன்றி
மகத்தினுற்றுணத்தான் மாதவத்தான்மற்றுமொரு
முகத்தினாலொருவர்க்கு முன்னிற்குமவனல்லேன். (௨)

வேறு.

ஈங்கெனதுள்ளா யிருக்கவெப்பொருளு மெனக்குமுள்ளாகி யானிருப்பன், ருங்குலன்முழுதுந் தருகுவனெல்லாஞ் சவலருமழி வதென்றன்றே, லோங்கியமுனிவர் பிதிர்மற்றும்ப வொளிமிகும் பிரமரிந்திரர்வே, ருங்கொளிமிகுத்தோ ரியாவரோயாக வவருமென் னுண்மையையறியார். (௩)

சந்தசர்வேத மியாவையும்பரமாச் சாற்றவும்பவதிங்கெனையே, யந்தணரெல்லாம் வேள்வியினலு மங்கியிற்போற்றுவ தெனையே, யெந்தலோகத்தும் பிதாமகன்முதலா மியாவருமிறைஞ்சுவ தெனையே, சிந்தையையொருக்கி யோகிகளுளத்தே தியானமுற்றிருப்பது மெனையே. (௪)

வேறு.

ஏகனாகிநிற்கின்றயானே யெல்லாவிமையவர்க்குந்
தேகம்பண்ணியவற்றுள்ளே திகனாய்நிற்றலாய்ச்செய்யு-

மியாகமெல்லாமெனைக்குறித்தே யியற்றுகின்றாரதிலவிர்ப்
பாகங்கொள்வேஞனவற்றின் பயனுங்கொடுக்கப்படுவேஞன். (௫)

பத்தியினையியாவர்சிலர் பாவியெனப்பணினென்றார்
சத்தியமேயவர்களுக்குத் சன்னிதியண்ணேவிற்ப
னித்துமுன்னானால்வேத நிட்டர்களாயறநெறிச்ச
ருத்தமமாமவனெனினு மொழிவறவேயுணர்கில்லார். (௬)

வேறு.

மறையவராசர் மாசகலுஞ்சிறந்த வணிகர்சாமனத்திறனல் வணங்கிற், குறைவறுபரமா னந்தமாம்பதத்தைச் செறிப்பன குலமிலா வெந்தக், கறையுறுங்குலத்தோ ராயினுமதனைக் காலபாகத்திலே பெறலு, நிறையெனவெனையே பத்தியான்மலரிட் டிடைவிடா திறைஞ்சுவாராகில். (௭)

வேறு.

பழுதிலவொன்றுடைய பக்தரொருகாலு
மழிவிலர்களென்றடியிலே பறைதலுற்றேன்
றொழுதவனென்பனை யெனத்தொழுகலுற்றோ
ரொழியவிகழ்வாருமெனை யேயிகழ்தலுற்றார். (௮)

வேறு.

கலையாளரியாவரினுங் காயாதன்மலராத
விலையாதணீராத வியன்றதுகொண்டென்பாலே
நிலையாயபத்தியினா னித்தமெனைவழிபடுவான்
றலையாயவன்பனெனக் கியாவரினுந்தானினியான். (௯)

படைத்தவனைப்படைத்தவற்குப் பண்டையேமறையனைத்துங்
கொடுத்தவனுந்தவிலெனக் குரவர்க்குங்குருபானுன்
றுடைப்பவனாசுரர்களைத் தொல்லறத்தினின்றோரை
யிடர்ப்படுமொழித்தவர்கட் கின்பமளித்திடுபவனுன். (௧0)

வேறு.

ஓதுமியோகியர்கடங்களுற்பவ மொழிப்பனுனுமபிறப்பினுஞ்
சேதுநாடொறுபிறப்பிறப்பு மிலனுவனுனிலகுலத்தினுங்
காதிநானதுதடைப்பனனது புரப்பனென்றுமுழுதளிப்பனு
னீதிதானினையலற்றமாயைசெய்து நித்தனுய்மறையநிற்பனுன். (௧௧)

வஞ்சமாயையொருசத்தியென்றனது மற்றியாரையுமயக்குமாம்
விஞ்சையாகுமொருசத்திமற்றெனது விமலயோகுபுணர்வார்கடங்

நெஞ்சின்மேவியசகலம்மாயையினை நீக்கியோகிகளுற்பரை
வாஞ்சிடாமெதனையனந்தசத்திகளு மியானினைத்தகவனமாகுமால். ()

வேறு.

ஆலமபனமாஞ்சத்திகளுக் காலம்பனனுடங்கலுமென்
பாலகலாக்குமூசத்தியுமென் பாலேயெவர் குமுள்ளாரெயன்
மாலொன்றியமாயையையடைந்து மலரோன்வடிவுகொண்டொன்று
ஞாலந்தன்னையுண்டாகப் பண்ணுநாளுவிதமாக. (௧௩)

வேறு.

ஒழியாவையுந் தானுயிர்க்கெலா
நாதனாகிய நாராயணனெனுந்
தீதிலாதவென் சத்திதித்தலா
லீதெலாநிலைபெற் றேயிலங்குமால். (௧௪)

வேறு.

மூன்றாவதுருத்திர மூர்த்தியதாய்த்
தோன்றுவகைநின்று துடைப்பதனைச்
சான்றோர்பலர் தாமதகாலமென
வான்றாவெனதாக வுரைப்பர்களால். (௧௫)

வேறு.

நித்தநியமத் தூடனேநெறியுறப் பார்ப்பார்கள்சிலர்
பத்தியாற்பார்ப்பர்சிலர் பாவனையாற்பார்ப்பர்சிலர்
சத்தியமாஞானத்தாற் பார்ப்பர்சிலர்சாற்றுகின்ற
வெத்திறத்தாரினுமிவனே யெனையுணருமெய்ஞ்ஞானி. (௧௬)

வேறு.

அறிவால்வழிபாடுறவா னெவன்மற்றவனென்னிற்
பிறிவானலனியானெனவே யினிமின்பிறர்தாமு
முறவால்வழிபாடுடையா ரடையாரொருகாலம்
பிறவாழியிடைப்பிறிவா யெனையேபெறுகின்றார். (௧௭)

எல்லாவுலகங்களு மென்பாலேயென்றாலே
செல்லாநின்றுஞ்செயலொன் றிலனென்சிவயோகி
யல்லாடவாதெனவும் மந்தச்செயலென்பா
லில்லாதமையும்மறிவா னென்றும்பிறிவானால். (௧௮)

வேறு.

காலமாகியபரஞ்செயுமுழுவதுங் கண்டுகொண்டிருப்பேனு
னூலினுனுண்ணுணர்வினு லெல்லாநுவலப்படுவேனான்

மாலிலாதமாயோகிமா வனுன் மகத்துவமெனக்குண்டா
மூலமாகியபரத்தினிற்பரமமா முறைமையான் மொழிகின்றேன். ()

வேறு.

படைப்பவனுனெப்பொழுதும் பரம்பரயோகிக்கிருந்து
நடத்துவனைனவொடுக்க மிலாஞானயோகத்தாற்
கிடத்திடுமென்றனையாகச் செடிமியயோகானந்தத்
திளைப்பட லானடஞ்செய்வே சொல்லையில்போனபத்தால். (உ0)

யானுமெயல்பறிவா னெல்லாவேதமுமறிவான்
வானுடர்மாமறைக ளறைந்தின் றமறைவிதனைத்
தானனும்பெறவுரியான் றவமுடையானிசமுடையா
னுதவன்புடையா னுகிலவனலமுடையான். (உக)

நான்காவது

**பத்திமையத்தியாயம் முற்றிற்று.**

ஆகத் திருவிருத்தம் கஉக.

---

ஐந்தாவது

## விசுவரூப அத்தியாயம்.

இவ்வளவுதானருளி யின்பமுடனன்பர்க்
கவ்வளவிலாததிரு மேனியதனுலே
யெவ்வொளியுமானவனி லங்கியவருள்ளே
செவ்வொளிவிளங்கநட னின்றுசெயலுற்றுன். (க)

எண்ணமதிறந்தபர யோகவிதயத்தே
வண்ணமதிலாதபர மாகியமகேசன்
விண்ணினிடையேவிமல னுனவரியோடுங்
கண்ணினெதிர்நின்றுநட மாடவவர்கண்டார். (உ)

வேறு.

ஏவன்மாயையிந்தவுல கெல்லாமாகியிருப்பதுவா
மேவனுலேநடக்கின்ற தேவன்பதங்கள்சிந்தித்தே
பாவமானவஞ்ஞானந் தன்னுலுண்டாம்பயம்போகு
மாலவந்தப்பரமபொருணின் றுடக்கண்டாரன்போடும். (ங)

வேறு.

நித்திரையுறுதவதில் வாயுவைநிறுத்திப்
பத்தியொடுசாந்தியை யடைந்தபரயோகத்

துத்தமர்களாதலுத யாத்தமனமில்லாச்
சுத்தவொளியோடவ்வொளி கண்டனர்கடேயோர். (௪)

வேறு.

கணமாத் திரையிற் கழல்கைதொழுவோ
ருணராமையழிக்கு முருத்திரனை
யணநாடரியானை யமாமுனிவர்
கணமாவெளிகண்டனர் கம்பிசையே. (௫)

வேறு.

சிரங்களாயிரஞ் சேவடியாயிரங்
கரங்களாயிர மாய்க்கரத்தேந்திய
வுரங்கொண்டமு மோங்கியசூலமும்
பரந்தவேணியும் பான்மதிக்கண்ணியும். (௬)

வேறு.

புண்டரீகவுரியுடையும் பொன்னொளியாற்பூமகன்பே
ரண்டமெலாமாவரித்த வனலிரவிமதியென்னக்
கொண்டிலகுமுக்கண்ணுங் கூரெயிறுங்கோடிபெய
ருண்டருக்கரொறிக்கின்ற வொனத்திகழுமோருருவும். (௭)

தனதான திருவருவிற் சகமெலாம்பிறந்துதன
தனலாலேயழியமிக வதிசயமாய்படிகாட்டி
யினமான தில்லாத விந்தவடிவந்தானே
யனையாகின்றசாசந் தனிலாடியருளினனால். (௮)

ஞாலமெலாஞ்செய்கின்ற நாதனை ஞானச்சுடரைக்
காலவுருவனைக்கலைக ளியாவையுமாங்காரணனை
யாலமமாகளத்தனையிவ் வனைத்துயிர்க்குமதிபதியைச்
சீலமிகுயோகிகடஞ் சிந்தனையிற்றிகழ்தேசை. (௯)

உற்பவநோயுற்றவர்க ளொழிப்பதனுக்கொருமருத்தாங்
கற்பகத்தையோகிகடங் காரணத்தையாரணந்தேர்
தற்பதத்தைப்பரமான சத்திகட்குச்சத்தியா
மற்புதவாதாரத்தை யமரேசர்தொழுமரசை. (௧௦)

வேறு.

ஆகாதழியாதிருந்தபர மானந்தத்தையகிலத்துக்
கேகாதிபனையத்தேவு மெல்லாமுனிவர்களுமிறைஞ்சி
நீகாவென்னுநின்மலனை நித்தியத்துவத்தைநிரந்தரமா
மியோகாலடையுமுயர்பதியைமொளிகட்கெல்லாமுள்ளொளியை. ()

வே று.

துறவினாறிவிடைத் தோன்றுஞ்சோதியை
யுறவினிலறிபவர்க் கெளியவுண்மையைப்
பிறிவினிலறிவரி தாயபெற்றியை
யறிவினையறிபவர்க் கருளுமண்ணலை. (௧௨)

வே று.

மாதாவிலியாகியகருணை மாதேவனைமாமாதவத்தி
னாசாரத்தையொருகாலு மழியாச்செல்வமளிப்பவனைப்
பேதாபேதமற்றெல்லாந் தானாயிருந்தபிரமத்தை
யோதாதுணருமியோகத்தையளித்தற்குரியவொண்சுடரை. (௧௩)

வே று.

உருவோவிங்கருவோவென் றும்பர்க்குமுணர்வரிதாய்க்
கருவாகிநின்றபெருங் கண்ணுனகாரணனைச்
சொரூபானந்தனைத்தனது சோதியுளத்தேதோன்றக்
குருவாகுந்திருமேனி கொண்டாடக்கண்டார்கள். (௧௪)

வே று.

கண்டோமையையதற்குளே யொருவர்காணொணுவகை காந்துதா, னண்டர்மாயையைமறைத்து மீண்டுவெளியாகியாடி யருளண்ணலை, வண்டுழாய்முடியனுன வச்சகலலோகயோனியை யிடத்திலே, கொண்டகோலமொடு கண்டுமா முனிவர் கூறொணுவுவகை கூடினார். (௧௫)

வே று.

தாம்பையினுள்ளேயிதயக் குகையின்மறைந்திருக்கின்ற
பரம்பொருளைக்கண்ணுலே பார்த்துப்பல்காற்பணிந்து
கரந்தலையிற்குவித்துத்தங் காசல்களையழிவுறநின்
றாரந்தரவோங்காரத்தை யுச்சரித்தங்குபநிடத்தால். (௧௬)

வே று.

பழுதிலீசன்முன் பாலகற்கண்டதோ
ரிழுதுபோல விதயமெலாமுக
வழுதுமன்பினே டாடியும்பாடியுந்
தொழுதுதோத்திரஞ் செய்யத்தொடங்கினார். (௧௭)

வே று.

ஆசமுறுமாருயிர்நீ யவ்வுயிர்க்குமதிபதிநீ
போகநுகர்புருடனுநீ நுகர்விக்கும்புராதனனீ

யோகிநீயுணர்பவனீ. யுளந்தொறுநின் றுணர்கின்ற
வேகனீநின்மலமா யாவையுமாய்பரம்பொருணீ. (௪௮)

வேறு.

காரணமெல்லாமொடுங்கினவர் காயத்துள்ளேகதியாகிப்
பிரமயோனியாயுள்ள பெருமவென் றும்பிறவாதாய்
மரணமில்லாநின்செம்பொன் வடிவேபரமாய்மற்றெதிலும்
பரமமாகியுயிர்க்குயிராய் நிற்கும்பரமாய்ப்பார்க்கின்றோம். (௪௯)

பரமாணுவினத்துருவாகிப் படைப்பாய்நீபல்லுலகுசளுந்
திரமாமுன்னுலேயுண்டாஞ் சிறிதிற்சிறிதாய்மிகப்பெரிதிற்
பெரிதாய்நின்னில்வேறில்லாப் பெருஜமகாணும்பெருந்தசமைக்
குரியாவெல்லாமொருநீயே வேறொன்றிலதென் றுரைப்பர்களால். ()

வேறு.

போதனுகியபுராணனும் புருடனைப்பொருட்கெலாமுயிராக
வாதிநாள்படைத்தனையவன் படைத்தனனிலமுமந்நாளே
வேதமியாவையும்விரித்தனை யுன்னிலேமீளவுமனைத்திற்கு
மேதுபூதனுயுளந்தொறுமிலங்குநின் னியல்புகண்டனமெந்தாய். ()

வேறு.

இப்பிரமசக்கர மியங்குவதுமுன்பா
லப்பெரியமாயை யுடையரயமலநீயே
சிற்பரமயோகபதி திவ்யகடனுநின்
பத்மசரணங்கள் சரணென் றுபணிகின்றோம். (௨௨)

வேறு.

எந்தைநீபரமாகாசத் திடை யுறைநிருத்தங்கண்டோ
மிந்தவெப்பொருளுமாறு யேகநீயாகிநின்ற
வந்தநின்மகிமாவைக்கண் டதிசயமாகவுன்ன
தந்தமில்பரமானந்த மனுபவித்தனுபவித்தேம். (௨௩)

உன்னுமையாமோங்கார முயர்முத்திக்கொருவிதைநீ
துன்னியுடனேறுந் தோன்றுமைமறைந்திருந்து
நின்னிடையெல்லாமாய நீமாயாய்நின்னொழிய
வன்னியமாயுளவெல்லா மசத்தியமென் றறைவர்களால். (௨௪)

வேறு.

தொழுதருமறையெலாந் துதிப்பதுன்னையே
பழுதறுமுனிவர்கள் பணிவதுன்னையே

யொழிவறவுணர்பவ ருணர்வதுன்னையே
யழிவறநினைபவ ரடைவதுன்னையே. (உ௫)

வேறு.

ஒருமறையனந்தசாகை கொண்டுனதருளொன்றி
னருமையையறிவிக்கின்ற வப்படியரியவுன்றன்
பெருமையையறிவார்சாந்தி பெறுபவர்பெறுதாசொல்லாங்
கருமயலுறுவார்சாந்தி கனவிலுங்காணமாட்டார். (உ௬)

வேறு.

ஆதிதேவனீயுலகினைத் துயிர்க்குமாதிபா
யீதெலாமமைக்குமன்ன லெல்லையற்றவின்பமெய்ப்
போதமேவியென்றுமைம் புலப்படாதிருப்பதோர்
சோதியாகிநித்தமுத்த சுத்தனாயிருத்தியால். (உ௭)

படைத்திநீயளித்திநீ படைத்தயாவுமுன்னிலே
யுடைத்திநீயொருத்தனே யுணர்ந்துகொண்டிருத்திநீ
யடைத்திநீயுளத்திலே நின்னையேயொளிக்குமா
தடைப்படாமலென்றுநின் சரண்பணிந்துசாருவோம். (உ௮)

வேறு.

யோகியாகியுயிராகியுணர்வாளுகி யிணையில்லா
வேகனாகியிந்திரனு மரியுமயனுமீசனுமாஞ்
சேகிதாவுந்தாதாவுந் தீயுமதியுந்தினகரனு
மாகிவெவ்வேறனைத்துருவு மானாயெனவேயறைகுவரால். (உ௯)

அகிலவுலகுமிருப்பிடநீ யறியவேண்டுமெக்காநீ
சகலதருமங்களுநவளர்க்குந் தாய்நீபுருடோத்தமன்றானீ
புகலுமரிநீபூமகனீ புராரிநீயெப்பொருளுக்கும்
பகுதிநீயொழிவின்றி நிலையாய்நிற்கும்பரம்பரநீ. (௩0)

வேறு.

கரணமியாவையுங்கடந்திருள் கடந்தனைக்கண்டவாதித்த
வருணமானசின்மாத்திர நேத்திரமுதற்புலன்மனஞ்செல்லாப்
பிரமமேகமாம்புருடனோர் பிறிதிலாப்பெருமையாற்பேச்சற்ற
பரமமான்முதற்பகுதிநிர்க்குணம்வெறும்பாழெனநிகழ்கின்றார். ()

வேறு.

ஓதுமொலியூறுருச் சுவைநாற்றந்தனக்கற்
றாதிமுடிவில்பா மாயசிந்திதமாய்ப்

பூதமனைத்தினுக்கு முள்ளாய்ப்புறம்புமாஞ்
சோதியினையறிந்தார்துஞ் சார்பிறவாரால். (கஉ)

வேறு.

எந்தயோகிகளுநாடுகின்றபர யோகிநின்னடியிறைஞ்சுகோம்
மந்தமாதியிலனந்தசத்தியுடை யண்ணனின்னடியிறைஞ்சுகோஞ்
சந்தமின்னதெனநாடுமோறரிய சம்புவேயடியிறைஞ்சுகோம்
பந்தமொன்றில்பரிசுத்தநற்பரம பாதபங்கயமிறைஞ்சுகோம். (கங)

வேறு.

கூடுகின்றுருகுமிறைவநின் ஞானக்கூத்தினைக்கண்டு கும்பிட்டே
நாடுமெங்கண்களுநின் றிருமேனியன்றி மற்றொன்றையுநாடா
வோடுமிய்டனமுமொழிவறநிறைந்த வுனையலதொருபொருளுணராப்
பீடுறுகமலமலர்ப்பதம்பணிந்தெம் பிறவிவேரறுத்தனம்பிரானே. ()

வேறு.

பவனேநின்னடிபணிகோம் பவோற்பவனேயடிபணிகோந்
தவனேநின்னடிபணிகோஞ் சங்கரனேயடிபணிகோ
மிவனேயென்றிடவிங்ஙனெழுந்தருளுஞ்பெருமே
சிவனேயெத்தேவர்க்குந் தேவேநின்னடிபணிகோம். (க.ரு)

வேறு.

சாடனிறசெய்கண்ணேவணங்குதுங் காலனூறியகாலைவணங்குதுஞ்
சாமகீதனைநாளுமவணங்குதுந் தாளிலெந்தலையாரவணங்குதும்
நாமரூபமதின்றியனைத்துமா நாமரூபனைநாளுமவணங்குதுஞ் [தும்.
சேமமாகியவீடருளோந்தையாஞ் சிவப்பிரகாசனையென்றும்வணங்கு.

வேறு.

உருப்பனேகவிதமாகியோருருவனு முருத்திரனினுள்குவார்
விருப்பனேயவர்கடற்பெரும் பிறவியெந்துநீறெழவிழிப்பதோர்
நெருப்பனேகினைவுறப்படாவொரு நிருத்தனேநிமலநெஞ்சகத்
திருப்பனேயிறைவனே சிவாயநமவென்றுசேவடியிறைஞ்சினர். ()

வேறு.

எந்தையளவற்றதிரு மேனியையிறைஞ்சிச்
சிந்தைகளிகூருமளவிற் சிவனைநேரோ
யந்தமறுதன்னையருள் செய்யவருளாலே
வந்ததிருமேனியினை மாலிறுதெண்டார். (கஎ)

வே று.

அளவிறந்தவனளவுபட்டிருந்தவவ்வருள்கண்
டளம்வியந்தினின்றொப்பிலாவுருவுகண்டுய்ந்தோங்
களவொழிந்துளங்காதலிக்கின்றதுன்கணைதீர்
வளமையின்னமுங்கேட்கவென்றடிவணங்கினரால். (௩௯)

மேலதானதன்பெருமையைக்கேட்கமேன்மேலுஞ்
சாலதாந்தவஞ்செயத்தகுதபோதனர்தமக்குக்
காலகாலனெக்கடவுளுந்தொழுதெழுங்கடவுண்
மூலமாதவன்றன்முகம்பார்த்துமென்மொழிவான். (௪0)

ஐந்தாவது

விசுவரூப அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௬௧.

## ஆறாவது

## சிவசத்தியின் செயலுரைத்த அத்தியாயம்.

காதலான்முனிவர் கேண்மினென்பெருமை காணுமாறருமை
கண்டதோ, ஞேதலான்மறையெனுள்ள வாறறியுமூற் பவிப்பதுல
கென்றனு, லீதெலாமுனிலைபெற்றி யங்குவதுமென்றனு லழிவுமெ
ன்றனு, லாதலாலழிவிலா தறப்பழையனுன நான்முழுதுமாகு
வேன். (௧)

வே று.

அகிலபூதங்களுக்குமந்தரி யாமியாய்நான்
சகலபூதமுமென்னுள்ளே சாரநான்றுங்கிநிற்ப
னிகிலமுமதிலெங்கண்ணு நிற்பவனெனவுமென்னைப்
புகலவும்படாதேயென்னிற் பொருள்பிறிதின்மையாலே. (௨)

வே று.

செப்பிடவொணுதெதிர் தெரிந்திடவுமுங்கட்
கெப்படிநிகழ்ந்தது வென்னுடையமேனி
யப்படியிருந்தவெனை மாயையதனுலே
யொப்பிடநினைந்திடு வரோயுணர்விலாதார். (௩)

வே று.

மேவியாதினுமுளனுய் வியனுலகைநடத்துவனுன்
ருவிலாவென்றனுலே சகலகலைகளுநடக்கு

மோவிலாவொருகூற்றா லுண்டாகுமுலகனைத்து
மாய்வதாமற்றொன்று விருமையுமென்மாயையதால். (அ)

சங்காதிபிடைமுடி வற்றிருப்பேனென்மாயையினாற்
பாங்காகப்பகுதிபுமான் பண்ணினன்முற்பவத்தாமா
னாங்காரமுதலாகவனைத்தும் விரிந்தனவதனா
லோகாரப்பொருளாமென் னொளியின்விரிவுலகெல்லாம். (கூ)

வேறு.

கரியதாய்கின்றிவ்வுலகினுக் கெல்லாங்கால சக்கரந்தனைநடத்து, இரணியகருப்பனுகுமார்த்தாண்ட னென்னிடைத்தோன்றினனென்னாற், புரியும்வேதங்களுக்கையுமொன்றாய்ப் பொருளதாய்ப் புராணமாய்ப்புணர்தற், கரியதிலரிதாஞான யோகத்தையுமடியிலே யவற்களித்தனனால். (௰)

வேறு.

எந்தநாளுமென்னையேசினைந்தவியல் பாலேயென்னருளினாலயன்
சந்தராடரியதிவ்வியமாமெனது தன்மைதானவதரிக்கிறா
னந்தமாதியிலென்னேவலாலவ னிவ்வகிலலோகமுமமைக்கிறா
னிந்தநாரணனளிக்குமாறுமிவ னென்னில்வேறெனவிலாமையால்

வேறு.

கடையுகமதிற்கடிய காலவனலாய்சின்
றடையவுமுருத்திர னழிப்பதுமென்னாலே
யுடையவலியாலுலவு மூழையுடனுய்ந்தே
நடையைமுதலானவை நடத்துவதுமென்னால். (௰௨)

வேறு.

தெய்வங்களுக்கும்பிதிரர்க்குஞ் செய்யும்பூசையாகின்ற
வவியங்கவியம்பாகஞ்செய் தனலோனனிப்பதென்னாலே
யுய்வந்திடமாறுதரத்தீ யாகுமவனுமுடனெல்லா
மெய்வெந்திடாமலென்னியமத் தாலேவேவித்திடுகின்றான். (௰௩)

வேறு.

வருணனெனுமகிலசல பதியுமழைவாருதவு
மருணனெனுமுலகுதிகழ் வதுசெயமலனுமமிர்த
கிரணனெனுமயிமம் ழ்வு கெழுமவருள்பவனுமெம்ம
பரனெனவிவனொன்று பணிவதைசெய்தொழுகுமவர். (௰௪)

வேறு.

மிசட்பயஞ்செயுமரக்கர்சோனிருதி யாமும்விண்ணவனும்வெவ்
விதா, மகப்பயின்றனை யளிக்குமந்தனுமாடகாதியர் வற்றதோர்

சுகப்பயன்செய் யனேகசனுமென்று தோழனுஞ்சுருதி சொன்னவா,
மகப்பயன்றனை யளிக்குமிந்திரனு மற்றெனேவல்செய்து வாழ்வ
ரால். (கக)

வேறு.

பொல்லாதபேய்களுக்கும் பூதங்களனைத்தினுக்கு
மல்லாதகணங்களுக்கு மதிபதியாகியவீச
னல்லார்க்குநன்மைபெற நல்குவதுநாடோறுமென்
சொல்லாலேமற்றவர்க்குச் சொல்லவேண்டுவதுண்டோ. (கஉ)

வேறு.

அருத்திசெய்தங்கிரா வடிவணங்குவோ
னுருத்திரகணத்தி லுத்தமனியோகிகள்
வருத்தமதொழித்து வாழ்வாமதேவனுந்
திருத்தமாயென்னுடை யேவல்செய்குவார். (கங)

வேறு.

தக்ககருமங்களிலேநடத்து வதுஞ்சார்பிலர்பால்
விக்கமளித்திடுவதும் விநாயகனென்னேவலினாற்
செக்கரிறத்தமரர்கள் சேனைபதியாய்ஞானத்தான்
முக்கியமாமறுமுகனென் னேவலையேமுயல்கின்றான். (கச)

வேறு.

மதியினன்மிகுமரீசியேயாதி யாய்மன்னுயிரனைத்திற்கும்
பிதிர்களாகியபதின்மருமுலகெலாம் படைப்பதென்பணியாலே
நிதிசெய்காரணன்றேவியாகிய திருசெல்வநல்குவதென்றன்
விதியினாலென்றன்பணியினாற் கலைமகள்விமலவாக்களிக்கின்றாள். ()

வேறு.

ஞேமெரிநரகினுள்ளே வீழ்பவர்தம்மையத்
தீமையினின்றுசரவித்திரி யெடுப்பதுவுமென்றே
லோமெனும்பொருளோனான் யோகியர்க்குமையாம்விஞ்ஞை
யாமகளருளுமாறு மலகிலென்னருளினாலே. (கசு)

வேறு.

படவரவரசென்னேவலாலுலகம் பரிப்பதும்பாவையுணின்று, வடவையுண்பதுமென்னேவலாற் பதினன்மனுக்கள் பாலனமுமற்றென்னாற், சுடருடையருக்கருருத்திரர்வசுக்க டொன்மைநத்துக்களச்சுனிக, டிடமுறமற்றுந்தேவர்கடத்தந் தேவையென்னேவலாற் செய்வார்.

## வேறு.

பொருவில்கின்னரர்கருடர் கிம்புருடர்சாரணர்கந்
தருவர்சாத்தியர்சித்தர் விச்சாதாரியக்கர்
வெருவவந்திடுமரக்கர் வேதாளபூதங்க
ளொருவரிங்கொழியாமஞ்ஞ் விதித்தவாறுறைவார். (சஅ)

## வேறு.

நிகழ்ந்திடுங்கலைகள்காட்டைசணிமிட நீதிசெய்சாந்திநாண் முகூர்த்தம், பகர்ந்திடுமிருதுவாண்டுமாதங்கள் பக்கங்களென்விதிப் படியே, யுகங்களுமனுக்கட்குள்ளவெல்லைகளுமுறைத்திடு பரா* பரார்த்தங்க, ணிகழ்ந்திடுங்காலபேதமியாவையு நானியமித்தபடியிலே நிலையாம். (சகூ)

## வேறு.

உற்பவசராசர வியோனியொருநாலும்
பற்பலவாகமொழி பாதலமனைத்து
மெப்புவனமும்பிரம ரண்டமவையாவு
மிப்படியிருக்குமது வென்றனியமத்தால். (ருo)

## வேறு.

அன்னியமின்றியென்னிலேதோன்று மனந்தபின்ஞன்மகமாயென், றன்னிடைநிகழும்பிரமாண்டக்க டனக்கொருமுடிவுதானில தான், முன்னிறந்தனவுமுடிவிலையென்பான் முளைத்திடப்படுவதப் படியே, யென்னியமத்தாற்றோற்றமு நிலையு மிறுதியும்பெறுவதிங் கெல்லாம். (ருக)

## வேறு.

பூதமைந்திஞெடுமனமும் புத்திமமதைபூதாதி
யாதிப்பகுதியென்னியமத் தாலேயென்பாலாயிருக்கு
மோதிவந்தவனைத்திற்கு மியோனியாகியுளமாயை
பேதஞ்செய்வதென்னேவ லாலேயன்றிப்பிறிதில்லை. (ருஉ)

## வேறு.

ஆகமெடுத்தவர்க்கெல்லா மதிபதியாமான்மாவாம்
போகநுகர்பரம்புருட னென்னேவல்புரிகின்றான்
மோகமெலாமறமாற்றி முடிவில்பரமானந்த
வேகவெனைத்தரும்விஞ்சை யென்னருளாலியங்குமாள். (ருங)

* பாரார்த்தம் என்றது - பிரமகற்பத்தின் அரை.

வேறு.

பலவுரைசெய்குவதென் பலபாசத்தினு
னுலகமெலாமெனிலே யொழுகவெனுள்ளொழியத்
துலகுபரப்பிரம மாகியசோதியதா
யிலகுவனுனெனில்வே றில்லையோரன்னியமே. (௨௪)

வேறு.

தொல்லையுள்ளவென் சோதியைச்சுத்தமா
நல்லவன்பொடு நானுமக்கோதினே
னெல்லையுண்மை யுணர்ந்தவர்க்குற்பவ
மில்லையில்லையென் றீசனியம்பினுன். (௨௫)

ஆறாவது

சிவசத்தியின் செயலுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௮௬.

---

ஏழாவது

## தத்துவநிசம் விபூதி அத்தியாயம்.

அணியமானதற் றறிகுவார்கள்பின்
செணியுறுதவா திகழுந்தேவனுந்
தணியனுனவென் றன்மையோதநான்
முனிவர்கேண்மெனு முதல்வனோதுவான். (௧)

வேறு.

சிரந்தனமாய்மிகத்திரமாய்ச்சிற்சுகந்
தரந்தனுருவாயவிகாரமாய்ச்சதா
நிரந்தரமாகிநிட்களமாய்நித்தமாய்ப்
பரம்பரமானதென்பழையதாமமால். (௨)

வேறு.

சங்கரனுருத்திரரி லியோகிகளிற்சம்புநான்
பங்கமில்சீர்வசுக்கடமிற் பாவகனுகின்றேனுன்
மங்கையரின்மலைமகளுன் வலியவரில்வாயுநான்
சிங்கமிருகங்களினுன் றினகரரில்விண்டுநான். (௩)

இந்திரனினிமையவரி லியக்கரில்வச்சிரவணனுன்
சந்திரனன்றாரகையில் விரதத்திற்சத்தியநா

னெந்திரத்தில்வில்லுநா னிலங்கியசாவித்திரியா
மந்திரநான்மந்திரத்தின் மாதவரில்வசிட்டனேன்.

ஞானமதிலென்னுடைய ஞானநானன்றுன (௫)
யானையிராவதநா னச்சிரமத்தில்லறநான்
கானமுறுபறவைகளிற் கருடனேன்கதியதனி
லீனமிலாமுத்திநா னிராக்கதரினிருதிநான்.

எண்ணுமதிற்காலநா னெல்லையிலாமாயைபல (௬)
பண்ணுமவர்களிலரிநான் பாசத்தின்மாயையுநான்
புண்ணியமாந்தீவுகளிற் புட்கரநான் பூதத்தில்
விண்ணுநான்றத்துவத்தின் மிருத்தியுமின்றேனேன்.

சித்தர்களிற்கபிலனேன் றேகங்கடனிற்பிரம
மத்தனேமீதர்களின்மகேசனேன்மறைகடனி
னுத்தமவோங்காரநா னூர்களில் வாரணசிநான்
றத்துவஞானிகடம்மிற் சதுர்முகனேயின்றேனேன்.

வேறு. (௭)

கற்பங்களின்மாகற்பநான் கணேசர்களிலேவிநாயகனேன்
சர்ப்பங்களிலேயனந்தனேன் சாயம்புவுநான்மனுக்களிலே
வெற்புக்களின்மாமேருநான் விசுவகன்மாநானெனலாஞ்
சிற்பஞ்செய்யவல்லவரிற் சேஞ்பதிகளிற்குகனேன்.

வேறு. (௮)

ஏவலார்களிலிராமனே னசுராரிற்பிரகலாதனேன்
மேவலாரகலவெல்லும்வீரர்களில் வேளும்வீரபத்திரனுநான்
றுவில்சாமமறைதன்னிலத்தின் மிகுசேட்டசாமமதுதானுநா
னேவிலாதடைவிலேசுழன் றிடுமுகங்களிற்கிருதயுகமுநான்.

வேறு. (௯)

தக்கபிரசாபதிதம்மிற் றக்கனேனெக்கணங்களினும்
விக்கினவினாயகனேன்றான் வியாதனேன்மெய்ம்முனிவர்களிற்
றெக்கசுத்தங்களிற் புருடசுத்தமாவேனேன்சோதி
மிக்கவிஞ்சையாவையினுந் தன்னையறியும்விஞ்சைநான்.

வேறு. (௧௦)

ஒன்னலர்த்தெறுபாபுதங்களி லோங்குவச்சிரமாவனேன்
பன்னுமெவ்வுலகங்களிற் பரமேசரிற்பரமேசனே

னின்னுமிங்குலகிற்சிறந்தன யாவைமற்றவையென்னதா
மன்னுசோதியில்வந்துதித்தன வென்னவேமனம்வைம்மினீர். ()

வேறு.

எந்தப்பிராணிகளும்பசுக்க ளென்னப்படுமிங்கதிபதியான்
பந்தப்படுக்குமெம்மாயா பாசமதனுற்பசுபதியாய்த்
தொந்திப்பதுவீழ்ப்பதுவாமித்தொழிலென் விளையாட்டேயன்றி
யிந்தப்பசுக்கள்கட்டினர்களில்லையவிழ்ப்பார்களுமிலதால். (கஉ)

வேறு.

ஊறதாம்போகமே யூட்டிவிட்டிடப்
பேறதாயுயிர்களைப் பிணித்தமாயைதன்
கூறதாங்கணங்களாற் கூறப்பட்டநா
லாறதாம்பாசம தறியக்கூறுவாம். (கங)

வேறு.

மனம்புத்திமஹத்துவம் வான்வளிதீநீர்மண்ணெட்டு
முனையுற்றபகுதிகளா மூக்குவிழிசெவிநாமெய்
புனைவுற்றவாய்கைகால் பாயுருபத்தஞ்சத்தந்
தினுவுற்றவுருச்சுவைநாற் றங்களெனுந்தத்துவமும். (கச)

ஆகவிவையிருபத்து மூன்றிவற்றுக்காதிதா
னாகியதுநியதாகி யகிலத்தின்காரணமாய்
மோகசமூசயகுணமாய் மூதற்பகுதிதெரியாமை
யேகமுமாந்தத்துவங்க ளிருபதுடனீரிரண்டாம். (கரு)

வேறு.

ஒத்தமுக்குணங்களாம் பகுதியுத்தமஞ்
சத்துவஞானமாந் தம்மஞ்ஞானமா
மத்திமங்கலப்பசா மற்றிம்மூன்றையும்
புத்தியின்விகாரமே புலப்படுத்துமால். (கசு)

வேறு.

தருமபாவ மிரண்டுளதப்புதற்
கருமையாகிய பாசமதாகிலு
மிருமையாதா வின்றியெனக்குநேர்
கருமமுத்தியின் காரணமாகுமால். (கஎ)

வேறு.

அறியாமைகாமம் வெறுப்பாமாயையகஞ்செறிதற்
பிறியாகப்புகுந்தொருவர் போக்கரியபாசமிவை.

முறியாதவினைத்தளையான் முடிச்சிட்டேயென்மாயை
பிறியாதென்பாலுளதாம் பிறவிகளுக்கடியாக. (௧௮)

வேறு.

பின்னியபகுதியாம் பிரதானமாயையு
மன்னியபுருடனு மானுமாதியாய்த்
துன்னியவிகாரமுந் தொல்லையீசனி
லன்னியமின்மையா லவனேயாகுமால் (௧௯)

வேறு.

அவனேபாசமவனேகட்டுண் டவனேகட்டுமதிபதியு
மவனேபசுக்களாகின்று னனைத்துமாகியுள்ளானு
மவனேயவனையொருவர்களு மறிவாரில்லையனைத்திற்கு
மவனேயனுதிபுருடனென வவனையறிவாரறைகுவரால். (௨௦)

ஏழாவது

தத்துவநிசம் விபூதியத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௨௦௬.

---

எட்டாவது

## பிரபஞ்ச சர்வகாரண புராணபுருஷப்பிரதிபாதன அத்தியாயம்.

வருந்தியுமறைகளீறறியுமன்னுயி
ரிரும்பவக்கடல்கடந் தேறவுய்ப்பதாந்
திருந்தியவுணர்வது செப்பவின்னமு
மருந்தவர்கேண்மினென் றருளிச்செய்குவான். (௧)

வேறு.

பகருபரமீசன்வெறுமொருவனீறில் பரமென்னுமாதிபகவனு
னிசரிலழியாதபிரமமயமாகி நிமலநிலையேயெனுழிவுறுக்
ககனவடிவானபிரமமெனிலியோனி கருவையுறமேவிவிடுவனு
னகிலசகமாகவறிவருமென்மாயை யெனைவிதையனுகியமருமால்.

வேறு.

கேன்மாதியதாய்பகுதிபுமான் சிறந்தமான்பூதாதிமனந்
தன்மாத்திரைகள்பேதங்க ளிந்தியங்கள்சமைத்ததனுற்
பொன்மாலிரவிபலகோடி போலுமண்டமபோதானே
டென்மாசத்தியெல்லையிலா வுயிருமுளதாயிழைத்திமொல். (௩)

வே று.

எந்தயோனியிற்பிறப்பா ரியார்க்குந்தாயென்மாயை
தந்தையானெனவறிவார் சனனவினைதப்புவரா
லெந்தையாயெனையறியா திருப்பவரென்மாயையினாற்
பந்தமாமியோனிதொறுற் பவித்திறந்துபதைப்பர்களால். (௪)

பாங்காயவிச்சைகட்கும் பகர்பூதமனைத்தினுக்கு
மீங்காருமிலரிறைவ னென்னையலாலியானேயா
நீங்காதவதிபதியாய் நின்றுலகம்படைக்கின்ற
வோங்காரவுருவான பிரமமெனவுள்ளேனும். (௫)

போன்றுகின்றபொருள்கடொறும் பொன்றுதேபுரையறநா
னின்றதறிந்தவனென்னை நேராகவறிகின்றா
னன்றியுமிங்கவன்றன்னைத் தன்னாலேயறிந்தழியா
தென்றுமுளபரமபத வின்பமடைந்திடுகின்றான். (௬)

சங்கையறத்தத்துவங்க டன்னுடையநுண்மையுமென்
னங்கமெனமொழிகின்ற வாறினையுமகிலத்தின்
அங்கமறுபகுதியுமப் பகுதிவினியோகமுமென்
றிங்கெனதுநிலையறிந்தா னென்னையடைந்திடுகின்றான். (௭)

வே று.

இறைவனுக்கணுதியா யிலங்குபோதமு
மறிவதுமுழுதையு மனந்தசத்தியு
நிறைவொடுசுதந்தர நித்தசத்தியென்
றறைவர்களறிபவ ராறுமங்கமாய். (௮)

வே று.

நுண்ணியதத்துவங்க ளெனநுவல்வனதானுகர்சீவன்
வுண்மையிலாமனமொடுதன் மாத்திரைகண்மற்றெதுக்கு
மெண்ணுவதாமிவ்வடியா மியாதினுக்குங்காரணமாய்ப்
பண்ணுவதுபகுதியதன் வினியோகம்பந்தமதாம். (௯)

வே று.

பூரணமந்தவுண்மையிற்காப்பதாகு மென்றறைந்திடப்பட்ட, வோரா
ணவின்றி யுள்ளவெப்பொருட்கு மியோனியாதோன்ற திவ்வுலகின்,
காரணமந்தப் பகுதியிலதனைக் கடந்துமேலாகுமொன்றான, பூரண
மானமகேசனென்றுரைக்கும் பொய்யைதீர்பரமனும்புருடன். (௧௦)

வேறு.

யோகமாமூலக மூற்றினுக்குமொரு மூலமானதெரி யாமையும்
போகுமாசெயும் விருத்தியும்பொரு ளனைத்தையுந்தரு புராணனு,
யேகனுங்கியிறை யாகிவானமென வெங்குமுள்ளபரமீசனு, மியோகியா
யுள வொருத்தனேயென வொருக்கிமாமறை யுரைக்குமால். (௧௧)

வேறு.

பாகமென்பர் பகுதிப்பாமனே
டேகமென்பர் சிலராணுவுக்கனு
வாகிமற்றது மப்படியாமென்பர்
யோகியுள்ளதெலாமென்பதுண்மையாம். (௧௨)

வேறு.

என்னையுறநினைப்பவரி லெங்கேனுமொருவனவன்
றன்மதியைக்கடந்தருளாற் றன்னிதயக்குகைதன்னிற்
பொன்மயனாய்ப்புராணமாம் புருடனைப்பொருந்துமெனி
லன்னியமதறவிறிவா னவன்பரமத்திடையடைவான். (௧௩)

எட்டாவது

பிரபஞ்ச சர்வகாரண புராணபுருஷப்பிரதிபாதன
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம்-௨௧௧.

---

ஒன்பதாவது

## மாயாவிகார அத்தியாயம்.

---

நின்மலமாயவிகாரியாய் வேறுபடாநிட்களனைச்
சின்மயனாய்நித்தனுஞ் சிவனேநீஜெகத்தான
தன்மையினையருளென்னத் தபோதனரோர்தனையொழிய
வின்மையினனப்பரிசை யின்னமவர்க்கெடுத்துரைப்பான். (௧)

வேறு.

என்றொழியவில்லைசக மியான்வ்வுருவல்லே
னுன்னிலொருமாயை யுலகுக்குமுதலாகு
மென்னுருவமானவெனை யன்றியதுநானுந்
தன்னியல்பினனிகழ் வுறத்தருவதன்றால். (௨)

வேறு.

யாதொன்றொருவராலேனு மறியப்படாதவியல்பாமென்
றேதிமுடிவின்றியசத்தி யந்தமாயையதனாலே

பேதவுலகமுண்டாகிப் பிறக்குமதனாற்பிறர்க்கென்றும்
போதப்படாதவென்னாலா யுள்ளபொருளிப்பொருளெல்லாம். (௩)

வேறு.

சோதியானந்தமாகுமெனத் தோன்றிடாவேதொல்லை
யாதிகாரணமாமென்றே யறைவர்களறியவொன்றாய்
நீதியாய்ப்பரமானந்த நிமலமாம்பிரமநானே
பேதியாவென்னில்வே றுண்டாவதுபிறிதொன்றில்லை. (௪)

வேறு.

அன்றியின்மை யறிந்தவராசலா
லென்றுமிச்சகந் தானதுமியானென
வொன்றுமாகி யுலப்பிலனைத்துமாய்
நின்றல்கண்டுவர் நிச்சயித்தார்களால். (௫)

சின்மயானந்த மாய்த்திகழ்கின்றதோர்
தன்மையாய்ப்பர மாகியசாந்தமாய்த்
தொன்மையானசுடரால் விகாரமொன்
றின்மையாமெனக் கேதமொன்றில்லையால். (௬)

வேறு.

எனந்தமற்றவேகமேனி யெண்ணில்பேதமாக்கவற்
றனந்தசத்தியென்னிலே யவற்றின்மாயையாதியா-
வனைந்தவந்தமாயையான வானிலேமனத்தினா
னினைந்திடப்படாதவவ் வியத்தமாகிநிற்பனான். (௭)

வேறு.

சத்தியொன்றாலேயானுந் தக்கசாயுச்சமான
முத்தியுண்டாகுமொன்றான் முழுதுசெல்வமுமுண்டாகுஞ்
சித்தியாநிற்பதெல்லாஞ் சிதையுமொன்றாலேயெல்லா
நித்தியமாகவென்ற னியமத்தானிகழுமன்றே. (௮)

வேறு.

மத்தியமாய்ப்பரஞ்சுடராம் மண்டலத்தான்மண்டிதமா-
யத்தகுமக்கரமாகி யறிவரிதாமனாதியாம்
வித்தகமாம்வீட்டின்மெய்ப் பரமபதம்விச்சையெனுஞ்
சத்தியினானிகழுமிது தக்கோர்களறிவர்களால். (௯)

உடுக்குமாடையினைப்போல வுலகமியாதொன் றிற்கு முக்கு
மொடுக்குமாகுநிகிலமுமாய் நினைத்தற்கரிதாமியாதொன் றின்
மடக்கும்வாக்குத்தான்செல்ல மாட்டாமையினற்பவக்கடலைக்
கடக்கும்பிரமவானந்தங் கண்டானடுக்கங்காணுனல். (௧௦)

ஈனஞ்செய்யுமஞ்ஞான விருளைக்கடந் தமேலான
பானந்தனக்கேயுளதான பரமவொளியாம்பரம்பரனை
ஞானந்தன்னுல்வேறறவே நானென்றறிந்தநல்லோனவ்
வானந்தமதாம்பிரமமயமாகி வீடேயடைகின்றான். (௧௧)

வேறு.

ஒப்பதுமிக்கதுகுறைந்தவொன்று தனையொழித்தில்லா
தெப்பொருளெவ்வொளிகட்கு மெவ்வொளிதானொளியாகுஞ்
சிற்பரமாகாயத்தே திகழ்கின்றவதுதெளிந்த
வப்பெரியோனானந்தமாய்ப் பிரமமாகின்றான். (௧௨)

வேறு.

உலகங்கண்முழுதுந்த னுளதென்னவுளதா
யலகின்றியழிவின்றி யறிவின்றியமிர்தா
யெல்லையொன்றுமறநின்ற பரவின்பமிதிலே
நிலைநின்றவவனின்ற நிலையென்றுமழியான். (௧௩)

வேறு.

புன்மயகோசமுள் புக்கொளிக்குளே
நன்மையதாகிய ஞானக்கண்ணினற்
சின்மயமாய்த்திகழ் தேசைநோக்கிய
தன்மையால்வியோமநற் றமங்காண்பரால். (௧௪)

வேறு.

அப்பரந்தன்னைத்தன்பா லனுபவித்தனுபவித்தா
ரொப்படிக்கண்டாருள்ளத் திலங்குமாமுனிவரந்தச்
செப்பருமின்பமாய்த்தன் றேசினுற்றிகழ்ந்துதன்னோ
டொப்பறுமவனேயார்க்கு மும்பனென் றுணரப்பட்டான். (௧௫)

எங்குமுளனுயிறையா யேகனேயெல்லாப்பூ
தங்கடொறுமறைந்திருக்குந் தன்மையனுய்ச்சராசரங்கட்
கிங்குயிராயுள்ளாகு மிறைவனொருவனையுமறிந்
தங்கடைவார்சாந்தியினை யடைவரல்லாதவரடையார். (௧௬)

வேறு.

மூகமொடுகிரிவந்தன் முடிபதமுடிவின்றூப்க்-
குகைமுழுதினுநின்றே குறைவறவுலகெல்லா
மகமொடுபுறமேவுற் றழிவறுநிலையாகும்
பகவனிலயலாகப் படுவதொர்பொருளின்றல். (௧௭)

வேறு.

மாசுடைமனத்தர்தம்மின் மறைப்பதாய்மாசிலாத
தேசுடையோகிகட்குந் தெரிந்திடப்படாததான
வீசனெனதானான மிப்படியருளினாலே
பேசினனுங்கட்கென்று பெருந்தகையருளிச்செய்தான். (௧௮)

ஒன்பதாவது
மாயாவிகாரவத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம்-௨௩௭.

---

பத்தாவது

## தத்துவதரிசன அத்தியாயம்.

துக்கரங்குறியில்குறி சூக்கசூசனைதெரியி
லக்கணஞ்சகல வுலகத்தினங்குரமவ்
வக்கரம்பரமபத மப்பரஞ்சுடர்பிரம
நிர்க்குணம்பரவெளியி னிச்சயம்பெறநிகழும். (௧)

வேறு.

ஒப்பரும்பாதத்துவத் தொப்பிடுஞ்சுருதிக்கலை
கப்பறும்படிபுத்தியிற் கற்பிதங்கள்கழற்றிமெய்த்
தப்பருந்தவர்சித்தமெய் தற்பரந்தனிலற்றதிங்
கப்பரம்பிரமத்தினுக் கத்தைலிங்கமெனப்படும். (௨)

வேறு.

அறிவினில்பிறிதெல்லா மறிவெனலறிவாகும்
பெறவரிதிதிலல்லாற் பிறிதினில்வெளிதில்லேன்
பிறவியதறுஞானம் பெறவரிததனாலே
மறவியதறுமாயா மயலலதிலையெல்லாம். (௩)

வேறு.

நின்மலமாகி நிரஞ்சனமாய்வே
றின்மையதாய விகாரமிதாமித்
தொன்மையதாகிய சூக்குமஞான
மென்மலமில்லுரு வென்பரறிந்தோர். (ச)

வேறு.

யோகினிலுளமென்பா லொருபடியுறவைத்தே
யேகவெளிநிலைகண்டா ரவரொனதியல்கண்டார்
பாகமதறுமொன்றும் பலவுருவமுமானே
யாகவுமெனையன்பா லறிஞருமயலன்றால். (ரு)

பேறறுபிரமானந் தமுமதுபெறுதாமும்
வேறறவறிகின்று ரவர்விழிமறைகின்றார்
கூறறவவிகாரங் கூடியவிறைதாமா
யூறறவுணர்கின்று ருண்மையையுணர்கின்றார். (சு)

வேறு.

பங்கமில்சீர்பரனுடைய தாதித்தன்பான்மையினை
யிங்கொருவர்க்கறிவரிய தாகியதவ்வியத்தத்தை
யெங்குமுளதாய்த்தம்பா லிலங்கியபேரின்பத்தைத்
தங்களிலேநிலைபெற்ற சாந்தரடைந்திருப்பர்களால். (எ)

வேறு.

மெய்த்தகவீடிது விமலமாய்ப்பரி
சுத்தமதாகிநிர்த் தொர்ந்தமாயொரு
பெத்தமில்பிரம ரூபத்திற்பேதியா
வுத்தமமெனது சாயுச்சமென்பரால். (அ)

வேறு.

ஆதியுநடுவுமந்தமுமிலாதவென்
றேதமதுவெளிற் பரமீசனுனனா
னீதியிலெனையறி நிமலநித்தனும்
பேதமிலெனைப்பெறும் பிறவிபின்பெறான். (கூ

வேறு.

தபனனொளிபெருகிரவி சசியுநிமினையச்
சிவனிசழ்வினிகழ்வுபெற சிறிதுமிவர் நிகழா
ரவனுடையவொளிகொடொரு வொளிதிகழுமசையா
விவனதொளிசிறிதுபெறி லிவர்நிகழ்வுபெறுவார். (௧௦)

வேறு.

உதியாமலென்று மொழியாமைநின்ற வொளியாகியென்
றுமுளதாய்த், திதியாய்நிறைந்து தெளிவாகியங்கோர் செய
லானதின்றி யருளான், மதியாளர்தங்க ளகமேயிகண்ட விடி
வாய்நிகழ்ந்தவடிவே, பதியாகியென்றுமழியாமைநின்ற படி
யாகிநின்றபரனே. (௧௧)

வேறு.

நித்தமனந்தநிட்களமின்பநிமலஞ்சற்
சித்தமுதந்தற்சிவமெனும்வேதத்திரளெல்லாஞ்
சுத்தனையந்தச்சுருதியினந்தத்துணிநெஞ்சத்
துத்தமர்தந்தமுளமதுணர்ந்தாரோமன்றே. (௧௨)

வேறு.

தாராகாயம்பவனம்புத் தானனலல்லனீராதார
னோராதானபிராணாதி யெல்லாவாயுவினுருவல்ல
னோராகாசன்மனம்புத்தி யுறுமொருசேதனமவனல்லன்
பாராகாரயோகத்திலகிய கேவலஞ்சும்பரமீசன். (௧௩)

வேறு.

எல்லாவேதத்துமறைந்திருப்பதுவாயாவர்க்குஞ்
சொல்லாதபரஞானமுங்களுக்குச்சொன்னேனு
னல்லானிப்பரயோகஞானத்தாலேநலிவொன்
றில்லாதவிடத்தடைவாயெனவியம்பியருளினான். (௧௪)

பத்தாவது

தத்துவதரிசன வத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௨௰௧.

## பதினோராவது
## யோக அத்தியாயம்.

இடர்ப்படுபிறவிதீர்க்கு மியார்க்குமெட்டாததாகி
யுடைத்தனதொளியினாலே யொளிர்வதாயுள்ளஞானச்
சுடர்த்திருவுருவமான சொரூபனையாதொன்றாலே
இடைத்திடுமந்தயோகங் கேண்மினென்றருளிச்செய்தான். ()

வேறு.

யோகவெரியோரிமைப்பிலே யாதுவினையுமெரிப்பதாந்
தேகமொழியுமிம்முத்தியே சேருமுணர்வுசெனிப்பதா
மியோகமுணர்வையொழித்தூறு யோகமொழியவுணர்ச்சிதா
னுகுதலவிதுளத்துளா னியாவனவனையளிப்பனுன். (௨)

வேறு.

ஒருகாலிருகான்முக்கான்மற் றுள்ளகாலமுள்ளத்தை
வருகாதலினாலியோகத்தே வைப்பார்மகேசனெனப்படுவா
ரரிதாமிதனைமாயோக மபாவயோகமெனவறிஞ
ரிருபாலாகவியம்புவரவ் விரண்டுமிருக்கும்படிகேண்மோ. (௩)

வேறு.

தானினையுமாறரிய தத்துவமியாதொன்
றானிகழ்வதாகுமத பாவமெனுமியோகம்
வானியலதாகியொரு வத்துவுமில்லாதாஞ்
சூனியமதாகவறி கின்றனர்கடியோர். (௪)

வேறு.

மயலிலாயாதிலொரு மலமிலாதானசுக வடிவதாமாசி
லொளியா, மயலிலாவேகவெனை யயலெனுதேகமென வறிகை
மாயோகமதுவா, முயலுமாறுசையென முடிவிலாநூல்கள்
பல மொழியுமியோகாடவியெலா, மியலுறுதாமரிய விதனி
லோர் * சோடசியு மிசையுறுதாகுமியல்பால். (௫)

வேறு.

சுத்தமாயென்னைக்கண்டெத் தோற்றமுந்தோன்றுதான
வுத்தமயோகமெல்லா யோகிலும்பரமயோக

* சோடசி என்றது, பதினாறு.

மத்திறமின்றியென்னை யாயிரங்கோடிகாலஞ்
சித்தமதொருக்கினாளுஞ் சிந்தையிற்றிகழக்காணார். (௬)

வேறு.

அயர்வறுயோகலா தறிகையாதன
மயலறவிந்திய மடக்கல்வாயுவின்
சயமிகுதியான தாரணைசமாதியு
மியமமுநியமமு மெட்டுமங்கமாம். (௭)

வேறு.

தருக்கிலாதபிரமச்சரியமெய்
யுரைக்கைகள்ளமொழிகையின்றுசெயா
திருக்கையாதொன்றுமேராமையென்றிவை
சுருக்கமாகயமமென்றுசொல்வரால். (௮)

வேறு.

மனத்தால்வாக்காற்காயத்தால் வாதையாவதியாதேனு
மெனைத்தாருயிர்க்குஞ்செய்யாத தகிஞ்சையாகவறிகவிது
தனிற்றான்பரமாந்தருமமிலை சாருமின்பந்தானுமிலை
யெனைத்தாம்விதியிலுயிர்க்கின்னா செயினுமதுவுமினிதேயாம்.

வேறு.

உளவாறுரைசெயறுனா செயுமாறொழுகுதரன்
வளவாய்மையெனநாடினர் மதியான்மிகுமுதியா
ரளவாரகிலமும்வாய்மையி லுளதாதலினதுதா
னுளவாசகவினையாலுடை யவனியாவையுமுடையான். (௧௰)

வேறு.

மறைவினிலாகினும் வலியினிலாகினும்
பிறர்பொருள்வவ்வுதல் பெரியகள்ளமாங்
கறையுறுமரிவையர் திறங்கனவிலும்
பிறழ்வறமறப்பது பிரமசாரமாம். (௧௧)

வேறு.

அரந்தைமுழுந்திடவாபத் தடைந்திடினுமன்பாலே
பிரந்தொருவனீந்திடினு மேராமையேராமை

வருந்திமனத்தாசையற மடக்குவூண்மாசற்ற
நிரந்தரமாமியமமிவை நியமமினிநிகழ்த்திடுவாம். (கஉ)

வேறு.

படர்தவம்வேதநூல் பயிறல்பத்தியாற்
கடவுளைவழிபடல் கருதினஞ்சினே
டுடனுறுதூய்மைசந் தோடமோங்கிய
சுடர்மிகுநியமமாய்ச் சுருங்கச்சொல்வரால். (கங)

வேறு.

பவமார்நோவுகெடநோன்பு பலவாலாக்கைமெலிவிக்கை
தவமாகுவதுவேதாந்தஞ் சதருத்திரியந்தரகமாஞ்
சிவமாகியமந்திரம்பலவின் செபமத்தியானஞ்சிறந்துள்ள
வவமானதிலாவதன்பேத மறிவாரறையும்படிகேண்மோ. ()

வேறு.

வாசிகமுபாஞ்சுமானதமென்று மதிலொரொவ்வொன்
றினுக்கொன்று, தேசுடைத்தென்று செப்பினர்பிறர்க்குந்
தெரியவேசெபித்திடுஞ்செபந்தான், வாசிகமுபாஞ்சுவாயித
ழுடித்தன்மாத்திரமானதமடங்கி, யாசறச்சிந்தைசெய்தலொ
ன்றினுக்கொன்றாயிரமடங்குநல்லனவாம். (கரு)

வேறு.

கூடினகொண்டலம் பாவங்கூடல்சந்
தோடமென்றறிஞராற் சொல்லப்பட்டதா
லாடுறுதூய்மை தானகம்புறம்புள
தோடமதிரண்டையுந் துடைத்தலென்பரால். (கசு)

வேறு.

தோயமுமண்ணுமாக் கொண்டுசுத்தமாக்
காயமேவியமலங் கழுவப்பட்டதாம்
வாய்மைமுதலதா மனத்தினாற்செயுந்
தூய்மையையுள்ளநற் றூய்மையென்பரால். (கஎ)

கந்தமுன்மலர்கொடு காயபூசனை
வந்தனைசெயல்புகழ் வாக்கின்பூசனை
பந்தனையறமனம் பத்தியாற்செயுஞ்
சிந்தனைநியதமுஞ் சிவன்றன்பூசையே. (கஅ)

வேறு.

புராதனரோதியவியம நியமங்கள்புகன்றனமேற்
பிராணனுதின்யாமமது பேசுபிராணாயாமம்
விராவியுடலுறும்வாயு விளம்புவர்கள்பிராணனென
நிரோதனமேசெயலதனை நிகழ்த்தலுமாயாமந்தான். (கசு)

வேறு.

மந்தமுத்தமமத்திமமென்றுமிங்
கந்தநற்பிராணாயாமமறிபவர்
சந்தமுற்றசகற்பவகற்பமாய்ச்
சிந்தையுற்றிரண்டாகவுஞ்செப்பினர். (உ0)

வேறு.

மந்தமாறிருமாத்திரைமத்திமோத்தமங்க
ளந்தவெல்லிரட்டியிரண்டுடன்மாத்திரையடக்கல்
கந்தவேர்ப்புறங்கம்பணங்கிளம்புகையிவையா
னந்தமாச்செயுமொன்றினுக்கொன்றுநன்மையதாம். (உக)

வேறு.

அகற்பமல்லதர்மந்திரமகத்திலேயர்னவாயாமந்தான், சகற்பமாம்வியாகிருதியோங்காரஞ்சாவித்திரிதனைமுக்கால், வஙிக்குமெல்லையாமிடம்வலம் வழங்கியவாயுவைவலியுறவலத்தான், முகக்கவென் றறிந்தவரியோகத்திலே முயன்றிட மொழிந்தாரால். (உஉ)

வேறு.

ஏசதுரும்விடத்தில்வழங்குகை
மாசதுருமல்வலத்தினில்வாங்குகை
யாசதறத்திதியாகவடக்குகை
ரேசகபூரககும்பகமென்றூர். (உங)

வேறு.

இந்தியமீட்சிதானே யிசைந்திடும்பிரத்தியாகாரங்
கந்தரமிதயநெற்றி கபாலநாபிகளிலொன்றிற்
சிந்ததஞ்சிந்தைவைக்கத் தாரணைதரித்ததேதக
சிந்தனையொழுங்கொன்றேடே சேர்ந்தது தியானமாமே. ()

வேறு.

ஓதுமாலம்பன மொன்றுமின்றியே
போதமும்போதகப் பொருளுமென்றுணர்,
பேதமதன்றியே யிருந்தபெற்றிதற்
சாதனமாகிய சமாதியென்பரால். (௨௫)

வேறு.

தாரணையாயாமத்திற் றகுதிபன்னிருமடங்காந்
தாரணைதன்னிற்றியானந் தானுமப்படியேயன்றுந்
தாரணிதன்னின்ஞான சாதனமாஞ்சமாதி
யோரணிதியானந்தன்னி லேற்றமிப்பரிசேயென்பார். ()

வேறு.

விவத்திதம்பெற் றிருக்கைவிளைந்தெழுங்
கவற்றிதீர்வுறக் கற்பித்தவாதன
மவற்றினெல்லை யறைவரிதந்தநற்
சுவத்திகம்பத்ம மியாதினுந்துய்யவாம். (௨௭)

வேறு.

இருதுடைமேலே யீரடியேறும்
பரமவிருப்பது பதுமமதாகு
மொருபதமேலே யொருபதம்வைக்க
மருவவிருப்பது மத்திமமாகும். (௨௮)

வேறு.

தடித்தவூருசா னுக்களின்சந்துற
மடித்தவந்தரத் துள்ளேமன்றயவைத்
தடித்தலங்கள்செவ் வேசெலவாங்குறத்
தொடுத்திருத்தல் சுவத்திகமாவதே. (௨௯)

வேறு.

நீரினுற்செழும்பதான்வவ்விடங்க ளெருப்பினுல்வெந் தவவ்விடங்க, ளூருசெந்துக்கடுற்சனர்துரால ருதிர்ந்திடுசருகு புற்றிடங்கள், கோரமாம்பயங்களுள்ளிடமிடிந்த கோயினுற் சந்திகண்மயான, மாரவாரங்களுள்ளிட மசுத்தமலக்கணுமன த்திணுக்கதனுல். (௩௰)

வருத்தமாயுடல் வாதையைப்பற்று மனமதுநடுநடுங்கி
ட்டுப், பொருப்பினிற்குகைகள்புண்ணியதேசங்கோயில்கணதி
களின்கணாக, ளிருப்பறுமனோதா னூர்வதுகடிப்ப தின்றியே
காந்தமாயுள்ள, வொருத்தருமறியா விடத்திலேயென்னை யுன்
னுவான்மனமொருப்படுவான். (௩க)

வேறு.

உன்னருமியோகொருப் படுவன்முன்னரே
யென்னருள்பெற்ற யோகிசர்தம்மையுஞ்
சென்னியர்லினயகன் றனையுந்தேசிகன்
றன்னையுமென்னையும் வணங்கிச்சாருவான். (௩௨)

வேறு.

தனியிலிருந்துபயமின்றிச் சாந்தனுகித்தனக்கிசையு
முனிவர்மொழியுமாதனங்கண் மூன்றினென்றிலேமூக்கி
னுனியைச்சிறிதேகண்விழித்து நோக்கியாதுநோக்காதே
யினியதன்பாலேயிருந்த வென்னைப்பாவிப்பதியோகம். (௩௩)

பங்கயந்தலைக்குமேலே பன்னிருவிரலிற்கற்பித்
தங்கதற்கறமென்மூல மறிவதுநாளமாகுந்
தங்கிடுஞ்செல்வமெட்டுத் தள்நிறந்தவளமாகு
மிங்குதன்வலிவைராக்கிய மெனப்படுதாதிதன்கண். (௩௪)

சகலசத்தியுமுடைத்தாய்த் தமனியமயமாய்த்தாரம்
புகலுமெப்பொருளாயென்றும் பொன்றுறுதாகியெங்குந்
திகழொளித்திரளாயுள்ள தெய்வமாய்த்தெரிக்கொணுதாய்
நிகழுதற்பரத்தினேரே நித்தனுநெஞ்சைவைப்பான். (௩௫)

வேறு.

மிக்கபரஞ்சுடரான விமலனையும்விளம்புற்ற
வக்கமலத்தேதனையு மயலாகாவகைநினைவா
னக்கரமாம்பரமாகா சத்துவனைத்தானெங்கு
மொக்கநினைந்தேபின்னை யொன்றுநினையாதொழிவான். (௩௬)

வேறு.

யாவருமறிவரி தாயபாவனை
மேவுறவிளம்பினன் வேறுமின்னமோர்

பாவனைகேண்மின்முன் பன்னுபங்கயப்
பூவினையுன்னியப் பூவினுள்ளதாம். (௩௭)

அன்னியமறவனலோனைக்காட்டிய
பன்னியபுருடனும் பஞ்சவிஞ்சகன்
றன்னையேசகலகத் தாவாத்தன்னுரு
வன்னியின்சிகையதா மதித்துநோக்குவான். (௩௮)

வேறு.

அவமறுபுருடன்ற னகமுறவறநன்றுச்
சிவமமலமதாகித் திகழ்தருபரமான்மா
வுவமையில்பரனெமென் னுரையினிலுணருந்தத்
துவநிலைகுலையாவச்சுதனென்மனம்வைப்பான். (௩௯)

வேறு.

அப்பரமான்மாவுள்ளே யதனுக்காதாரமாகி
நிற்பதாய்ப்பரமமாகி நிரஞ்சனமாகியுள்ள
வொப்பருமகேசனேக வுருவனுயுன்னியந்தத்
தற்பரந்தன்னோடொன்றுந் தன்மையனுகச்சார்வான். (௪0)

சொன்னதத்துவங்களெல்லாஞ் சோதனைபண்ணிப்பின்னைப
பின்னதத்துவமொன்றில்லாப் பிரமநானெனநினைந்து
பன்னருமோங்காரத்தாற் பரமமாம்பரமாயுள்ள
வென்னிலேதன்னைவைத்திங் கென்மயமாகியுள்ளான். (௪௧)

வேறு.

நலங்கொள்ஞானநீராடிநல்லாகுதி
துலங்குநீற்றையுத்தூளித்துமந்திர
மிலங்குமங்கிமுதனினைந்தீசனைப்
புலங்கொள்சோதியின்புஞ்சமாயுன்னுவான்.. (௪௨)

வேறு.

ஆசிரமமேலிலதியாசிரமமாகத்
தேசுதருமாமறையினீறுகடெரிந்தே
பாசுபதயோகுபசு பாசமறநேரே
பேசினனிதாருமறியப்பெறுமதன்றூல். (௪௩)

வேறு.

பிறிதறுமெனதுசாயுச்சம்பேறதா
மறைபொருள்கேவலம்வழங்கிடாரிது
வறமுயலந்தணர்தம்மிலன்பரிற்
றுறவுறுபிரமசாரிகட்குஞ்சொல்லலாம். (சச)

வேறு.

பரியுமகிஞ்சைப்பழிதீர்பிரம
சரியந்தவந்தருசந்தோடமுண்மை
யுரியபொறைதூய்மையுண்டென்றிருக்கை
யரியவிரதத்துக்கங்கங்களாமால். (சரு)

வேறு.

எண்ணியவிவற்றிலொன்றீனனவன்
றண்ணியுறுதலாற்றனைநழுவினன்
புண்ணியவினையினோர்பொருந்தவென்னையே
கண்ணியவிரதமெஞ்ஞான்றுங்கொள்வார். (சசா)

வேறு.

ஏகினிந்தவியோகாவெனையடைந்
தாசைசோபம்பயமற்றவான்மராய்ப்
பாசமற்றெனைப்பாவித்தபாவத்தா
லாசிலென்மயமானாரனேகரால். (சஎ)

வேறு.

எப்படியார்நினைந்தடைவரியானவர்க்
கப்படியானிகழ்ந்திடுவனுந்தலா
லொப்பருஞானமெய்யோகுளத்தெனைத்
தப்பரும்பூசனைசெயவேதக்கதாம். (சஅ)

வேறு.

பொய்யில்பத்தியாற்றுறவாற்போதம்பொருந்தும்புந்தியினாற்
செய்யும்பூசையேபூசை செய்யுந்தொழில்களெல்லாம்வீட்
டெய்யம்பண்ணியுண்டொன்று மாசைப்படாதாவினையடையு
முய்யும்பரிசுமறைந்தபொரு ளுங்கட்கிரங்கியுரைத்தனனால். ()

வேறு.

பத்தியையென்பாலுடையா னெவ்வுயிர்க்கும்பரிவுடையா
னொத்தநலந்தீங்கடையா னொடுங்கியவுள்ளமதுடையான்
புத்திமனமென்பாலே பொருந்தியபாவனையுடையா
னெத்தனையும்பொறையுடையா னியாவரினுமெனக்கினியான்

பன்னியயோகொழிவில்லான் பற்றிலான்பாவகத்தோ
ரின்னலிலாரும்பித் திடுவதொழிலவதிலான்
றன்னைவெருவுதலொன் றுற் றுன்வெருவுறுனில்லா
னென்னதியானைவில்லா னென்றுமெனக்கினியான். (ருக)

வேறு.

துயருறுதசந்தோடமேவியே
செயலெலாமுதாசீனனாகியே
யயலராயினுரன்பரின்றிவா
ழியல்பினுனெனக்கினியனாயினன். (ருஉ)

வேறு.

துதியினிந்தையிற் றுல்லியனுயெனிற்
றிதியடைந்து சினஞ்செருக்கின்றியே
மதியினென்றினும் வாஞ்சையுறுதுள
வதிகவானெனக் கென்றுமெய்யன்பினன். (ருங)

வேறு.

வாடலின்முகமது மலர்ச்சியுமவனகற்
பீடுறுவித்தகம் பெற்றநோடலங்
கூடுதலினியவை கூறலியாவரு
நாடருநிலையுடை யவர்க்குநல்லனன். (ருச)

வேறு.

எத்தொழில்களுஞ்செயினு மென்னருளினலென்
பத்தர்பரமப்பத மடைந்திடுவராலே
தத்துவமும்வைத்தெனி லெனைச்சரணமாக
நித்தமுநிராசையை யடைந்துநினைகிற்பார். (ருரு)

வேறு.

அடங்குமனனாய்ப்பயனொன்றி லாசைப்படாதானளவற்ற
விடங்கொள்வினைகள்செய்தாலும் வீடேயெய்துமாதலினா
லுடம்புகானாநல்யோகி யுண்டாம்வினையாலொருகாலு [ல்.
மிடும்பையடையானாசைப்பா டில்லானெனையேயடைந்திடுமா

வேறு.

ஆற்றுவருதொந்துவ மயக்கவை துடைத்துப்
பெற்றதொடமைந்தெனருள் பேறுறநினைந்தே
யுற்றகருமங்கள்வினை யென்னவுளைசெய்யார்
கற்றவர்கள்வீடதென வேகருதுகின்றார். (௫௭)

வேறு.

என்னையேநினைந்தெனைப் பணிந்தெனையருச்சித்தென்
றன்னையேயறிந்தவனெனை யன்றியேசாரான்
பின்னியாதுமப்பெருந்தகை யிருந்திடந்தனிலென்
சென்னியாற்சுமந்தவற்கு வேண்டுவதுசெய்குவனால். (௫௮)

வேறு.

என்பதத்தைவிட்டிதர தேவதைகளைக்காமித்
தின்பம்வேண்டுநர்தாமு மிங்கிதனையெய்துவரா
லன்பினாலருண்மூர்த்தி வேண்டுநர்களுமவர்பாற்
பின்புவந்தெனையறிந்து நன்முத்தியேபெறுவார். (௫௯)

வேறு.

சாமவொந்தக்கடவுளருஞ் சாவில்லாதென்
றாமமதாமென்றெனையொழித்தார் தண்மவிட்டன்
பாமகவாதிச்சுற்றமும்விட்டென் பாலன்பா
யாமரானுந்தக்தளவுமிலிங்கத் தருச்சிப்பான். (௬௦)

எந்தப்பதமுங்காதலிலாதே லிங்கத்தே
வந்திப்பவன்ஞானாத்மகமாகி மயலற்றோன்
சிந்தைக்குளதாயெங்குந்தானாஞ் சிவலிங்க
முந்தச்செனனந்தனிலேயறிவா லடைகின்றான். (௬௧)

வேறு.

பங்கயில்பத்தியோடுமற்றெவரும் பாவனையா லிலிங்கத்தே, யிங்கெனையிறைஞ்சி யின்பமெய்ஞ்ஞான மெங்குமா மிலிங்க மெய்துவரா, லங்கியிற்புனலிலம்பரந்தன் னிலருக்கனி லனிலனிந்துவினி,லிங்கிவையிலிங்கமாராதியிலேயெனைநினைந்திறைஞ்சிடப்படுவான். (௬௨)

வேறு.

ஈதெலாம்வெறும் லிங்கமயமதா
மீதெலாமிலிங் கத்துளிருப்பதா
மாதலாலந்த லிங்கமெங்கேயங்கே
காதலாற்றொழ வேகடனாகுமால். (௬௩)

வேறு.

கருத்திலாமூடர் காட்டமாதிகளிற் காண்பர்கற்றவர்களாகாயத், தருக்கனிற்புனலிற் காண்பராகுதியி லருச்சனைசெய்யுமந்தணரவ், வெரிக்கணேகாண்ப ரெங்குமாய்நின்ற வெனதுலிங்கத்தினைநேரோ, யொருக்கியபரம யோகிகளென்று மொழிவறக்காண்பர்தம்முளத்தே. (௬௪)

வேறு.

நீங்காதகாதலினா னின்மலபோதம்பயக்கு
மோங்காரமாத வுருத்திரியந்தானுதல்
பாங்காகவத்தியன வானுகிப்பரித்தவுடல்
போங்காலத்தளவுநிரந் தரயோகம் புரிந்திடுவான். (௬௫)

வேறு.

காமரமெங்கும் காமரகன்றூர் காசிக்கே
யாமரனூந்தத் தளவுமிருப்பா ரங்காவி
போமளவுற்றூர் போய்வரவுற்றூர் புரையற்றோர்
காமனைவென்றூர் தாமனைவென்றூர் கழல்கண்டே. (௬௬)

வேறு.

பொல்லாதவருமங்காவி போகிலென்னைவிடப்போகார்
நல்லவொன்னையடைவனென நவிலவேண்டுவதுமுண்டோ
வெல்லாவுயிர்க்கும்விடளிப்ப னென்றால்வினையாலிரங்காத
வல்லாவனைகூடினுமுயிர்விட் டகல்வானல்லனறிவுடையான். ( )

அரியமறையிலரியமறை யாகும்பொருளீத்திஞர்களாற்
றெரியநினைந்தபடியெவர்க்குஞ் செப்பப்படாதுசெய்தவத்தா
லுரியவிரதனுயறமற் றெடுங்குழுள்ளத்தொடுபிரம
சரியமுடையபத்தனுக்கு நேரோசாற்றத்தகுவதுவாம். (சஅ)

வே று.

இவணமேதனதியோக மியம்பித்தன்னிடத்திருந்த
வுவணகேதனனை நோக்கி யுத்தமர்க்குணர்த்தயோக
மிவணுமைசெய்யத்தக்க திலங்கியிசாந்திநெஞ்சிற்
சிவணியபுதல்வர்க்கென்றே சிவனருள்செய்யலுற்றான். (சகூ)

முனிவரோயுங்கட்கெல்லா மொழிந்திடப்பட்டஞானம்
புனிதராய்ப்புதல்வர்க்காகப் பூசுரரார்கேட்ப
வினியநம்வாயினாலே யிப்படியிறப்புமீண்டு
செனியமுமொழியநீருஞ் செப்புமென்றருளிச்செய்தான். ()

வே று.

இந்தநாரணனீசனுகியவென்னில்வேறலனென்றுதஞ்
சிந்தையானினைவார்களுக்குமைசெய்தயோகிதுசெப்பலா
மெந்தவாருயிர்கட்குமின்னுயிராகுநாரணனென்பதோ
ரந்தமாதியிலாவெனக்கருளானதோர்வடிவாகுமால். (எக)

வே று.

ஏதமுறநாரணனை யென்னிலயல்காணும்
பேதவிழியாளர் பிறவிப்பிணியுறாரோ
மாதவனையானென மன்த்தினினைகிற்கும்
போதவிழியாளர் பரிபூரணமடைந்தார். (எஉ)

ஆதலிலருச்சிமினிவ் வாதியரியானுய்க்
காதலொடுகாண்மின்மய லாகியயல்காண்பார்
தீதுதருமாநரகு சேர்வுறுவர்தீதா
நீதியுறுநீசரிடை யானும்வெளிநில்லேன். (எங)

வே று.

நான்மறையந்தணர்நாய்வதைசெய்தத
னான்மிசைகின்றவரோதினர்மூடப்

பான்மையரும்மரியைப்பழியாதம்
மேன்மைசெய்பத்தனைவீடுறுவிப்பன். (எச)

வேறு.

மருவற்கென்னைமனம்வைத்தோன் மாலாயிவனென்வடி வென்றே, பரவிப்பணிவானென்றேசெம் பவளத்திருவாய் மலர்ந்தருளி, யரவிற்றுயிலச்சுதனுக மழுந்தத்தழுவவவ்விடத் தே, கரவுற்றருளவதிசயமாய்க் கண்டார்மேனிகண்டிலரால். ()

வேறு.

தன்பராபரமாகியவடிவினைத் தவிர்ந்தொருதவனுகித்
முன்புதோன்றியவடிவதாய்முகுந்தனு முனிவனைமுகநோக்
துன்பவேறவருளினுலுமக் கிறைசொன்னவிச்சுடர்ஞான
மன்பராயறமறிபுதல்வர்க் கறிவியுமெனவருள்செய்தான். ()

வேறு.

ஈசனதாயவந்த லிங்கியபரமஞான
மாசிலந்தணனுமாகி * யாகிதவனலனுகி
நேசனுயடங்கியுள்ள நெஞ்சனுநிமலனுக்குப்
பேசலாமென்றுகண்ணன் பின்னருமருளிச்செய்தான். ()

யோகிகளியாவருக்கு முத்தமயோகிதானே
யாகியமுகுந்தனிவ்வா றருளியங்கவனைநீங்க
வேகவீசனையுநாராயணனையு மிறைஞ்சியெல்லா
மோகவேதனையுமாறி முனிவர்முற்பதியடைந்தார். (எஅ)

வேறு.

சனற்குமாரன்சம்வத்தகற்குரைத்தனன் சனந்தனன்புல கற்குப், புனிற்றிதீர்முனிகௌதமன்பொருட்டிது புகன்றனன் புகன்முனிங், கனித்தமற்றுளவிதுபரத்துவாசனுக் கங்கிரா வளித்தாரோர், செனிப்பிலாவிதுகபிலமாமுனி பஞ்சசிகற் குரைத்தனன்முன்னே. (எக)

வேறு.

எந்தையாகியபராசரன் சனகனுலிலங்கிடப்பெற்றனென்
றந்தைபாலருந்தவஞ்செய்வான் மீகியுந்தானறிந்திடப்பெற்று

* ஆகிதவனலன் என்றது - அக்கினிஹோத்திரமுள்ளவன்.

னந்தகோபன்மனையினின் மதலையாய் நடித்தநாரணன்குந்தி, மைந்தனாகியபார்த்தனுக்கருளினான் வழங்கினன்மான்றேர் மேல்.

வேறு.

ஏமமாகவெனக்கிதருத்திர
வாமதேவன்வழங்கினனாதலாற்
காமனீறெழக்காய்ந்தவக்கண்ணுத
னாமமேசரணாகத்தருவதே. (௮௧)

வேறு.

வேறாகநானிந்த வெம்பிறவிவேரறப்பா
னேறாளுமிறையவனே யென்றவனையடைகின்றேன்
மாறாதவன்போடுந் தாரமக்கள்கிளையொடுநீ
ராறுருஞ்சடைமுடியா னடியடைமினிதுவேண்டில், ()

ஒழியாதுநற்கரும யோகத்தாலுருத்திரனை
வழிபாடுசெய்யுமென மாமுனிவன் மறைப்பொருளை
மொழிவானைநேரோயம் முக்கணிறையெனமுனிவர்
கழிகாதலொடுபணிந்து கைதொழுதுகளிகூர்ந்து. (௮௩)

வேறு.

ஓதம்பற்றியோருணர்ந்துறங்கமலநீயுன்றிருவருளாலே, போதம்பெற்றவானவர்களும் பெறலரும்புராண பூரணன் செம்பொற், பாதம்பற்றியப்பவக்கடல் கடக்கநற்பத்திபெற் றனமாற்றா, லேதும்பெற்றனம்பெறாததொன்றில்லை யென் றிணையடிபணிவுற்றார்.

வேறு.

நீதின்முத்தியைச் சேரவேண்டினர் சிவனடிக்கே
யாதிலர்ச்சனை செய்தனரந்த வெல்லையிலாப்
போதமுற்றநற் கருமயோகினைப் புதல்வர்களா
யாதரிப்பவர்க்குணாயினென் றருண்முனிபணித்தனன். (௮௫)

வேறு.

மாமறையின்மெய்ப்பொருளை மாலொடுசனற்குமாரன் முதலார்க்கிறைவழங்குதிருவார்த்தை, யானைமவடிவைக்கொட

ரியமுதமதனைத்தன்றருமுனிவர்கட்கருளு மறிவதனையன்பாற்,
றுமதனில் சௌனகனையாதிமுனிவர்க்குத் தந்தருளுகென்று
தலையாலுறவணங்கித், தோமின்முனிசூதனுரை செய்யவவர்
கட்குச் சுருதிகடெரிந்தமுனிசொன்னபரிசீதால். (அசு)

வேறு.

மூவர்தேடிறைசனற்குமாரன்முதன்முனிவர்கட்குமொழி
கீதையிங், கியாவரோதினரிதன்பொருட்டுணிவரியாவர்கேட்ப
வரியாவர்தம், பாவம்வேரொடுபறிந்துநல்லபிரமப்பதம்பெறு
வராதலான், மேவுமன்பினொடுமோதமீளுதலில் வீடுவேண்டி
னன்விரும்புவான். (அஎ)

பதினோராவது

**யோகவத்தியாயம் முற்றுப்பெற்றது.**

ஆகத் திருவிருத்தம்-ருருஅ.

## ஈசுரகீதை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

**சர்வஞ் சின்மயம்.**

# பரிசோதனப் பத்திரம்.

## தமிழ் மான்மியம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௮ | — | ௬ | கிச்ஜ | கிஜ |
| ௧௪ | | ௨௫ | குமாரா | குமார |

## ஈசுரகீதை.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௫ | ௨௧ | ௪ | யெயுது | யெய்து |
| ௮ | ௨0 | ௪ | யறியா | மறியா |
| ௧௨ | ௪௯ | ௧ | மயரர் | யமரர் |
| ௧௪ | ௭ | ௪ | லோ | லோர் |
| ௧௫ | ௧௩ | ௨ | மிகுத்து | மிகுத்துநி |
| ௨0 | ௯ | ௩ | மமா | மமர் |
| ௸ | ௧0 | ௧ | த்தாம் | ந்தாம் |
| ௨௨ | ௧௮ | ௨ | பொறு | பொரு |
| ௨௬ | ௫ | ௩ | வளைத் | வனைத் |
| ௸ | ௧0 | ௩ | யிாமக | யிர்மகி |
| ௩௨ | ௩ | ௩ | மண்டம | மண்டம் |
| ௩௯ | ௧௩ | ௩ | காசன | காசன் |
| ௪௬ | ௪௧ | ௩ | ரமமாம | ரமமாம் |
| ௸ | ௸ | ௸ | யுளள | யுள்ள |

## பகவற்கீதை.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௫௭ | | ௭ | களை | கள்பொருட்டு |
| ௬௨ | — | ௫ | எண்றெ | என்றெ |
| ௭௧ | | ௨௧ | ெ ளண | கௌண |
| ௮௯ | ௨௭ | ௪ | யென்று | யன்று |
| ௯௩ | ௫ | ௪ | போனம் | போன்ம் |
| ௯௬ | ௪ | ௧ | ளிநின் | ளினின் |

## பிரமகீதை.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௧௮0 | ,, | ௨௮ | ன்பசொ | ன்மசொ |
| ௧௯0 | ௧௭ | ௨ | மையின் | மையினு |
| ௧௯௩ | ௩௫ | ௪ | மிகவங் | மிகவுங் |
| ௨௭௯ | ,, | ௫ | மில ன் | மிலான் |
| ௨௮0 | ,, | ௨௨ | ல், துவே | ல், இதுவே |
| ௨௮௫ | ௨௫ | ௫ | மகிழ் | மிகழ் |
| ௨௮௭ | ,, | ௧௪ | பாமெ | பாமெ |
| ௨௯௬ | ,, | ௩௪ | ஆக்ஞாயய | ஆக்ஞாபயு |
| ௩0௫ | ,, | ௧௪ | ஆஞன் | அஞன் |